நிலையான ஆட்சி - நிரந்தர வளர்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித்தலைவி
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
ஆற்றல் மிக்க தலைமையில்

100 நாள் சாதனைகள்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித்தலைவி
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
ஆற்றல் மிக்க தலைமையில்
100 நாள் சாதனைகள்
சிறப்பு வெளியீடு எண் : 4 செப்டம்பர்– 2016

ஆசிரியர் - வெளியிடுபவர் :
ஜெ. குமரகுருபரன் இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
டி.எஸ்.சுப்பிரமணியம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (பொ)

முதன்மைப் பொறுப்பாசிரியர் :
சா. இளங்கோ
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
அ. மகேஸ்வரி
த. தெய்வானை
மு. தனபால்

உதவி ஆசிரியர்கள் :
த. ஷேக் முகமது
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
ப. பேச்சிமுத்து
கு. கார்த்திகேயன்

நிருபர்கள் :
இரா. பாலாஜி
அ. மதன்

கணினி வடிவமைப்பு :
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

ஆசிரியருக்கு உதவியாளர் :
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் :
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர் :
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

"உங்கள் வாழ்வு உயர, விவசாயிகளின்
வாழ்வு வளர, அனைத்துத் தமிழர்கள் வாழ்வு உயர
இடையராது உழைத்துக் கொண்டே இருப்பேன்."
– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இந்த இதழில்....

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.......... 5
- வேளாண்மைத்துறை.......... 6
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை.......... 9
- பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை.......... 14
- வணிகவரி மற்றும் பதிவுத்துறை.......... 14
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.......... 15
- எரிசக்தித்துறை.......... 16
- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை.......... 20
- நிதித்துறை.......... 22
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை.......... 23
- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.......... 24
- உயர்கல்வித்துறை.......... 27
- நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை.......... 29
- உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை.......... 31
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை.......... 39
- தொழில் துறை.......... 41
- தகவல் தொழில்நுட்பவியல் துறை.......... 42
- தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை.......... 44
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை.......... 49
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.......... 50
- பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை.......... 56
- திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.......... 56
- பொதுத்துறை.......... 57
- பொதுப்பணித்துறை.......... 60
- வருவாய்த்துறை.......... 61
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை.......... 64
- பள்ளிக் கல்வித்துறை.......... 67
- சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை.......... 72
- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை.......... 73
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை.......... 75
- போக்குவரத்துத்துறை.......... 76
- மாற்றுத்திறனாளிகள் நலத்துறை.......... 77
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை.......... 78

23.05.2016 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா
மண்டபத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில்
மேதகு தமிழ்நாடு ஆளுநர் முனைவர் **கே. ரோசய்யா** அவர்கள்,
புரட்சித்தலைவி செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக
பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆறாவது முறையாக முதலமைச்சராக பதவியேற்றவுடன் முதலில் கையெழுத்திட்ட 5 முக்கியத் திட்டங்கள்

- சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி!
- கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்வு!
- அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம்!
- திருமண உதவித் திட்டங்களின் கீழ், திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு!
- டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தை குறைத்ததுடன், 500 கடைகளை மூடவும் ஆணை!

நிலையான ஆட்சி - நிரந்தர வளர்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

புரட்சித்தலைவி

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

ஆற்றல்மிக்க தலைமையில்

100 நாள் சாதனைகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

★ ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கு ரூ.12,462 கோடி.

★ பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு ரூ.722 கோடி.

★ தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 24 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட ரூ.27.48 கோடி.

★ விடுதி மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.103.15 கோடி.

அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு

“சமுகத்தில் அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிகாண முடியும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ விடுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், பராமரிப்பதற்காகவும் ரூ.83.80 கோடி. ●

வேளாண்மைத் துறை

★ பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த அனுமதி வழங்கி மாநில அரசின் பங்கான ரூ.487 கோடி ஒப்புதல் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உரிய இழப்பீடு விவசாயிகளுக்குக் கிடைக்கும் பொருட்டு, இழப்பீடு கணக்கீட்டிற்கான அலகு பிர்க்காவிலிருந்து வருவாய் கிராமமாக மாற்றம்.

★ டெல்டா மாவட்டங்களுக்கு ரூ.54.65 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2016–2017ஆம் ஆண்டிற்கான குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.06.2016 அன்று அறிவித்தார்கள். இத்திட்டத்தில், இயந்திர நெல் நடவு ஒரு இலட்சம் ஏக்கரிலும், 1,000 அலகு, அதிக அடர்திறன் கொண்ட பாலிதீன் (HDPE) குழாய்கள் விநியோகம், 50,000 ஏக்கர் பரப்பளவில் நெல்லுக்கான நுண்ணூட்ட கலவை விநியோகம், 1 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கான துத்தநாக சல்பேட் விநியோகம், காவிரி பாசனப் பகுதிகளில் உழவு மானியம் மற்றும் பயறு வகை விதைகள் 15,000 ஏக்கர் பரப்பளவிலும், மற்றும் வெண்ணாறு பாசனப் பகுதிகளில் பசுந்தாள் உரப் பயிர்களின் விதைகள் விநியோகம், 30,000 ஏக்கர் பரப்பளவிலும் 100% மானியத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,37,899 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும், நெல் சாகுபடி பரப்பு 3.16 இலட்சம் ஏக்கராக அதிகரிப்பு.

★ சம்பா சாகுபடிக்கென ரூ.64.30 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒரு சிறப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.08.2016 அன்று அறிவிக்கப்பட்டு தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் முழுமையாகவும் மற்றும் டெல்டா பகுதிகள் கொண்ட கடலூர், திருச்சி, அரியலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

★ 2016–2017ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், எண்ணெய் வித்துக்களில் இயந்திரமாக்குதல் திட்டத்தின் கீழ் விதைக்கும் கருவியைக் கொண்டு பயறு வகைகளை ஊடு பயிராக நடவு செய்தல் என்ற இனத்தின் கீழ் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.93.89 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 9,539 பயனாளிகள் பயன்.

★ 2016ஆம் ஆண்டு சர்வதேச பயறு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதைக் கொண்டாடும் விதமாக பயறு வகையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ரூ.54.38 கோடி ஒதுக்கீடு. மேலும், நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட பயறுவகை பயிர் சாகுபடி சார்ந்த செயல் விளக்கங்கள் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம், பயறுவகை சாகுபடிப் பரப்பளவு 40,500 ஏக்கராக உயர்வு.

★ பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்படும் திட்டத்தின்கீழ், 22,275 ஏக்கர் பொருள் சாதனையும், ரூ.138.445 இலட்சம் நிதிச்சாதனையும் எய்தப்பட்டுள்ளது.

★ சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும், நுண்ணீர் பாசனத்திட்டம் 27,415 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு ரூ.6,336 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு 9,500 பயனாளிகள் பயன்.

★ ரூ.6.12 கோடி மானியத்தில், 1,70,125 ச.மீட்டர் பரப்பளவில் பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடில் அமைப்பு. மேலும், பாதுகாக்கப்பட்ட சாகுபடி (Protected cultivation) ரூ.22.40 கோடி மானியத்தில் செயல்பாடு.

★ ரூ.4.278 கோடி மானியத்தில் தோட்டக்கலைப் பயிர்களில் புதிய பரப்பு விரிவாக்கம் மற்றும் பழைய தோட்டங்களை புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டது.

★ ரூ.1.074 கோடி செலவில் அறுவடை பின்செய்நேர்த்தி கட்டமைப்புகள் அமைப்பு.

★ ரூ.1.586 கோடி செலவினத்தில் தோட்டக்கலைப் பண்ணை இயந்திரமயமாக்குதல்.

★ அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்கள் மூலம் ரூ.1,263.028 இலட்சம் வரவினம்.

★ நதிப்பள்ளத்தாக்கு திட்டத்தின் கீழ், ரூ.4.57 கோடி செலவில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகள் நடப்பாண்டில் செயல்படுத்த ஆணை.

★ டெல்டா மாவட்ட விவசாயிக்கு 90 மில்லிமீட்டர் விட்டம் மற்றும் 6 மீட்டர் நீளம் கொண்ட பாசன நீர் கொண்டு செல்லும் குழாய்கள், 30 எண்கள் கொண்ட ஆயிரம் அலகுகள் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் வேளாண்மைப் பொறியியல் துறையால் வாங்கி வழங்கல்.

★ 200 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் ரூ.11.65 கோடி மானியத்தில் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை 60 பம்பு செட்டுகள் நிறுவப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ வேளாண் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டி கூடுதலான சந்தை விலைக்கு விற்பனை செய்திட ஏதுவாக 50 சூரிய வெப்பக் கூடார உலர்த்திகள் ரூ.1.50 கோடி மானியத்தில் அமைக்க நடவடிக்கை.

★ விவசாயிகள் குறித்த காலத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்ளவும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்கிட ரூ.9.21 கோடி மானியம் வழங்க ஆணை.

★ விவசாயிகளுக்கு பண்ணை அளவில் தேவைப்படும் கருவிகளை வாடகைக்கு வழங்க, 324 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் ரூ.32.44 கோடி மானிய உதவியுடன் நிறுவுவதற்கு ஆணை.

★ அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைத்து, தரமான விளைபொருட்களை சரியான விலையில் நுகர்வோருக்கு கிடைக்கச் செய்யவும், உபரி உற்பத்திப் பொருட்களை மதிப்பூட்டல் செய்யவும், விவசாயிகள் விளைபொருட்களுக்கு உகந்த விலை பெறவும், தமிழகத்தில் 10 மாவட்டங்களில் காய்கறி மற்றும் பழங்களுக்கான விநியோக தொடர் இணைப்பினை ரூ.398.75 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்த நடவடிக்கை.

★ ரூ.7 கோடி மதிப்பீட்டில் வேளாண் தொழில் முனைவோருக்கான மின்னணு கல்வி மையம் 10 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 7.59 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ரூ.25.52 கோடி சந்தைக் கட்டணம் வியாபாரிகளிடமிருந்து விற்பனைக் குழுக்களால் வசூல்.
- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கும் பொருளீட்டுக் கடனை ரூ.1. இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கல். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக 379 விவசாயிகளுக்கு ரூ.6.78 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.
- வேளாண்மைக் கல்வி அளிக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் இந்திய வேளாண்மைக் கல்லூரியும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நாலந்தா வேளாண்மைக் கல்லூரியும் துவங்க அனுமதி.
- தமிழ்நாடு திறந்த வெளி பல்கலைக்கழகத்துடன் இணைந்து இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஒரு திறன் மேம்பாட்டு பயிற்சித்திட்டம் 12.07.2016 அன்று துவங்கப்பட்டுள்ளது. இதில் 4,000 பயனாளிகளுக்கு ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்க திட்டம்.
- நவீன பயறுவகைப் பயிர்கள் சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி 10,000 விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஜூன் மாதம் துவங்கப்பட்டது.
    - திருவண்ணாமலை மாவட்டம், பையூரில் மா ஆராய்ச்சி மையம் அமைத்தல்
    - மூன்றாம் தலைமுறை இளைஞர்களுக்கு தொன்மை வாய்ந்த வேளாண் தொழில் நுட்பங்களை கிள்ளிகுளத்தில் பல்நோக்கு பண்ணையத்தின் மூலம் காட்சிபடுத்துதல்.
    - திருச்சிராப்பள்ளியில் உழவர் விடுதி.
    - கொல்லிமலை பகுதியில் அங்கக முறைப்படி தரமான கருமிளகு உற்பத்தியை செயல்படுத்துதல் ஆகிய நான்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்கள் ரூ.12.94 கோடி மதிப்பீட்டில் 2016–2017ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. முதல் கட்டமாக ரூ.6.47 கோடி விடுவிப்பு.

இயற்கைச் சூழல் பேணுவோம்!

“உணவுச் சங்கிலி (Food Chain) என்ற அற்புத நிகழ்வின் மூலம் தாவரங்களும், விலங்குகளும் ஒன்றையொன்று சார்ந்து மனித வாழ்விற்கு அடித்தளமாக அமைகின்றன. எனவே, இயற்கைச் சூழலை நாளைய தலைமுறையினருக்காகப் பேணிக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் இன்றைய தலைமுறையினருக்கு உள்ளது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசனத்திட்டம் – நீர்வடிப்பகுதி மேம்பாட்டின் கீழ், ரூ.62.80 கோடி, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளுக்கு விடுவிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 803 பண்ணைக்குட்டைகள் உருவாக்கம்.
- 2,172 தடுப்பணைகள் உருவாக்கம்.
- 508 கசிவுநீர் குட்டைகள் உருவாக்கம்.
- 373 அமிழ்வு நீர் குட்டைகள் உருவாக்கம்.
- 6,851 ஹெக்டர் பரப்பரளவு சாகுபடி நிலம் மேம்பாடு.
- 442 தூர்ந்த கிணறுகள் மழை நீர் சேகரிப்பு அமைப்பாக செறிவூட்டம்.
- 3,275 ஹெக்டர் பரப்பளவில் பயிர் செயல் விளக்கத் திடல்கள் அமைப்பு.
- 1,888 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி ரூ.453.314 இலட்சம் வழங்கல்.
- நிலமற்ற தொழிலாளர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு பணிக்காக ரூ.549.882 இலட்சம் வழங்கல்.
- நபார்டு மூலமாக செயல்படுத்தும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், ரூ.46 இலட்சம் நிதி மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் NGOக்களுக்கு வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

• • •

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5,500 கால்நடை சிறப்பு முகாம்களில் இதுவரை 306 முகாம்கள் நடத்தப்பட்டு, மொத்தம் 34,418 விவசாயிகளின் 3,14,197 கால்நடைகள் பயனடைந்துள்ளது.

★ ISO தரச்சான்றிதழ் மற்றும் இந்திய அரசு நிர்ணயித்த தரக்கட்டுபாட்டு தரச்சான்றுடன் அமையப்பெற்ற மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலிருந்து இது வரை 4,49,011 எண்ணிக்கையில் தூய அயலின உறைவிந்து குச்சிகளும், 9,01,272 எண்ணிக்கையில் கலப்பின உறைவிந்து குச்சிகளும், 95,151 எண்ணிக்கையில் உள்நாட்டின உறைவிந்து குச்சிகள் மற்றும் 84,003 எண்ணிக்கையில் முர்ரா இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு, செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட கருமாற்று தொழில்நுட்பத்தின் மூலம் 30 கன்றுகள் பிறந்துள்ளன. அவற்றில் முறையே 15 காளை கன்றுகளும், 15 கிடேரிக் கன்றுகளும் அடங்கும்.

★ தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் அரசு பண்ணைகளின் மேம்பாட்டிற்காக ரூ.7.50 கோடி செலவில் உள்கட்டமைப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 13 நவீன கால்நடை கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

★ அரசு பண்ணைகளில் பராமரிக்கப்பட்டுவரும் கால்நடைகளின் தரத்தை உயர்த்த நல்ல தரமான நல்மரபியல் கொண்ட கால்நடைகள் கொள்முதல் செய்யவதற்காக ரூ.1.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 132 கால்நடைகள் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது.

★ தற்பொழுது குறைந்து வரும் எருமை இனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கோடு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.3.89 கோடி செலவில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை (ம) நீலகிரி தவிர) "எருமையினபால்பண்ணை அமைக்கும்திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டங்களிலும் முதல் கட்டமாக 4 பயானாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதுடன் கால்நடை கொட்டகைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு கால்நடை நிலையங்கள் வாயிலாக, இதுவரை 59.53 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை, 10.73 இலட்சம் பசு மற்றும் எருமை மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணி, 53.50 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி பணி, 57.22 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் 1.75 இலட்சம் சினையுறா கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ●

வாழ்க்கை முன்னேற்றம்

"அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ தமிழகத்தில் அஸ்காட் திட்டத்தின்கீழ் நாளதுவரை ஆந்த்ராக்ஸ் நோயினை தடுப்பதற்காக சுமார் 8.78 இலட்சம் கால்நடைகளுக்கும், சப்பை நோயினை தடுப்பதற்காக சுமார் 2.97 இலட்சம் மாட்டினங்களுக்கும், தொண்டை அடைப்பான் நோயினை தடுப்பதற்காக சுமார் 6,600 மாட்டினங்களுக்கும், ஆட்டம்மை நோயினை தடுப்பதற்காக சுமார் 8,000 ஆடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

★ திரவ நைட்ரஜன் ஆலை, மாவட்ட கால்நடை பண்ணை, உதகமண்டலத்தில் ரூ.172.67 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ மொத்தம் 250 புதிய செயற்கை கருவூட்டல் மையத்திற்குத் தேவையான உபகரணங்கள் ரூ.58.29 இலட்சம் மதிப்பில் வழங்க ஆணை.

★ ரூ.8.60 இலட்சம் செலவில் 43 செயற்கை கருவூட்டல் பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.1.56 இலட்சம் செலவில், 70 செயற்கை கருவூட்டல் பணியாளர்களுக்கு புத்தாக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ "கால்நடை காப்பீட்டுத் திட்ட"த்தின் கீழ், இதுவரை 1,58,240 கால்நடைகளுக்கு ரூ.395.60 இலட்சம் செலவில் காப்பீடு.

★ அரசு கால்நடை பராமரிப்புத் துறை பண்ணைகளில் 289.06 ஏக்கர் நில பரப்பில் 2,460.99 மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றுள் 2,401.68 மெட்ரிக் டன் பசுந்தீவனம் பண்ணையின் தேவைக்கு உபயோகப்படுத்தப்பட்டது.

★ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட "அவசர சிகிச்சைப் பிரிவு" புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கல்வி) முனைவர் நரேந்திர சிங் ரத்தோர் அவர்கள் 28.05.2016 அன்று துவக்கி வைத்தார்.

★ ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் ரூ. 30 இலட்சம் மதிப்பில் புதிய "கோழி மற்றும் கால்நடைத் தீவன உற்பத்திப் பிரிவு", தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் ச. விஜயகுமார் இ.ஆ.ப., அவர்களால் 04.06.2016 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

★ பறவை மற்றும் அயல்நாட்டினச் செல்லப் பிராணிகள் பிரிவு மற்றும் வரவேற்பு மற்றும் பதிவுக் கூடம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனையில் 20.06.2016 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

★ "நீடித்த கால்நடை உற்பத்தி– நோய் கண்டறிதலில் நவீனப் போக்குகள் மற்றும் எதிர்காலச் சவால்கள்" குறித்த பன்னாட்டுப் பயிலரங்கு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 11.07.2016 முதல் 13.07.2016 வரை நடைபெற்றது. இந்தப் பயிலரங்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இங்கிலாந்தின் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் பென்ஸ்டேட் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து செயலாற்றுகிற மும்முனைத் திட்டமான இங்கிலாந்து – இந்தியக் கல்விமற்றும் ஆராய்ச்சித் துவக்கத் திட்டம் மற்றும் இங்கிலாந்தின் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது.

★ விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா, பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் வாயிலாக

காட்டுப்பாக்கத்தில் 05.07.2016 அன்றும், நாமக்கல்லில் 09.07.2016 அன்றும் நடைபெற்றது.

★ "பாரம்பரிய கால்நடை மருத்துவ மூலிகை பொருட்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்" அமைத்திட ரூ.1,372.95 இலட்சம் தமிழக அரசின் புதுமை முயற்சி திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளது.

★ தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்த நிதி ரூ.629.91 இலட்சத்தில் "தமிழ்நாட்டின் கற்பிக்கும் கால்நடை மருத்துவமனைகளில் நோய் கண்டறியும் உபகரணங்களை வலுப்படுத்தல் (ரூ.325.50 இலட்சம்)", "நீடித்த கால்நடை வளர்ப்பிற்குப் பண்ணைக் கருவிகள் / சாதனங்கள் உருவாக்கப் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தை ஏற்படுத்தல் (ரூ.150.41 இலட்சம்)", "கால்நடைத் தடய அறிவியல் ஆய்வகத்தை ஏற்படுத்தல் (ரூ.154 இலட்சம்)" ஆகிய மூன்று புதிய நிதியுதவித் திட்டங்கள் பெறப்பட்டுள்ளது.

★ மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 2016இல் மேற்கொண்ட தேசிய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசை ஆய்வு மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேசிய அளவில் 36ஆவது இடத்தையும் மாநில அளவில் 3ஆவது இடத்தையும் பெற்று முதல் 50 பல்கலைக்கழக பட்டியலில் இடம் பிடித்து பெருமை சேர்த்துள்ளது. குறிப்பாக இந்தியாவில் உள்ள 12 கால்நடை மருத்துவ பல்கலைக் கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவஅறிவியல் பல்கலைக்கழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

★ அதிகபட்சமாக 31.77 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 03.08.2016இல் ஆவின் நிறுவனம் சாதனை.

★ மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.1,000/– ஆக வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.2,000/– ஆக உயர்த்தப்பட்டு 2011–2012ஆம் ஆண்டில் கடல் மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.2,000/– வீதம் வழங்கப்பட்டு வரப்படுகிறது. 2016–2017ஆம் ஆண்டில் 1,53,149 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.30.63 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குகடற்கரை பகுதியில் கணவாய் மீன்பிடிப்பிற்கு தேவைப்படும் உபகரணங்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியத் தொகை 200 மீனவர்களுக்கு வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

★ கடல் நடுவே ஆழ்கடலில் ஏற்படும் ஆபத்து தருணங்களில் கரையிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுடன் ஆபத்து நிலை குறித்து தகவல் தெரிவிக்க ஏதுவாக தமிழகத்தில் உள்ள மீன்பிடி படகுகளுக்கு ஆபத்து கால சமிக்ஞை அனுப்பும் கருவிகளை (Distress Alert Transmitters) மானிய விலையில் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 623 விசைப்படகுகளுக்கு 90 சதவீகித மானியத்தில் ரூ.94.94 இலட்சம் மதிப்பீட்டில் ஆபத்துக்கால தகவல் பரப்பும் கருவி (DAT) வழங்கப்பட்டுள்ளது.

★ குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மே 2016 முதல் இது நாள் வரை 95 பயனாளிகள்/ குடும்பங்களுக்கு ரூ.1.66 கோடி வழங்கல்.

★ மே 2016 முதல் ஆகஸ்ட் 2016 வரை சிறைபிடிக்கப்பட்ட 77 மீனவர்களில் 73 மீனவர்கள் விடுவிக்கப்பட்டு தாயகம் திரும்பியுள்ளனர்.

- 2016–2017ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களுக்கு ரூ.1,518.44 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதல் தவணையாக 50% தொகை ரூ.759.22 இலட்சம் விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாட்டில் உள்ள 10 அரசு மீன் பண்ணையினை நபார்டு வங்கி உதவியுடன் மேம்படுத்த ரூ.2,500 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதல் தவணையாக ரூ.1,225 இலட்சம் விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தின் 19 மாவட்டங்களில் உள்ள 26 மீன் அங்காடிகளை ரூ.23.76 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, முதல் தவனையாக 20 மீன் அங்காடிகள் கட்டுவதற்கு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தால் விடுவிக்கப்பட்ட ரூ.78.50 இலட்சம், சம்மந்தப்பட்ட மாநகராட்சி / நகராட்சி /மீன் அங்காடி உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக ரூ.70.34 இலட்சம் 15 மீன் அங்காடிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- கடல் மீனவர்கள் கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும்போது அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, மீனவர்களுக்கு வழங்கிட 38,000 உயிர்காப்பு மிதவைகள் வாங்கிட பணிகள் நடைபெற்று வருகிறது.

- மீன்பிடி துறைமுகம்/மீன்பிடி இறங்கு தளங்களின் மேலாண்மைக் குழுக்களுக்கு, மீன் மற்றும் மீன் சம்பந்தப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்காக போக்குவரத்து வசதி ஏற்படுத்திட 25 வாகனங்களை வாங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

- மண்டபத்தில் உள்ள மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூலமாக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 200 மீனவ மகளிர் பயனாளிகளுக்கு, ரூ.1.50 இலட்சம் செலவில், கடல் பாசி வளர்ப்பு குறித்தான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கடல் பாசி வளர்ப்பை ஊக்குவிக்கும் விதமாக ரூ.22.50 இலட்சம் செலவில் கடல்பாசி மிதவைகள் வாங்கிட பணி ஆணை.

- மீனவ மகளிர் பயனாளிகளுக்கு நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டத்தின் கீழ் மீன் அங்காடிகள் வழங்கப்பட்டு, மீன் உணவுப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் பையகப்படுத்துதல் குறித்து தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மூலமாக ரூ.1.05 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானியத்தில் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித்திறனை மேம்படுத்துவதற்காக 469 பயனாளிகளுக்கு கண்ணாடிநாரிழை பரிசல்கள் மற்றும் 1,950 பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகள் ரூ.139.7 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

- ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள ரூ.7.73 இலட்சம் செலவில் 216 தமிழக மீனவர்களுக்கு கடல்சார் மேலாண்மை தொலைத் தொடர்புச் சாதனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் இயந்திரப் பராமரிப்பு தொடர்புடைய பயிற்சி.

- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் 420 மீனவ

தமிழக மக்களின் நலன் காக்கும் அரசு

"ஏழை, எளிய மக்களை பாதுகாக்கும் அரசாக, அவர்களை கை தூக்கிவிடும் அரசாக எனது தலைமையிலான அரசு விளங்கி வருகிறது. எனவே தான் ஏழை, எளிய மக்களுக்கு நேரடியாக பயன்தரக் கூடிய பல்வேறு நலத் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மகளிர்களுக்கு மதிப்பூட்டப்பட்ட மீன் உபபொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சியினை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி ரூ.5.31 இலட்சம் செலவில் பயிற்சி அளித்துள்ளது.

★ இந்திய வேளாண் திறன் மேம்பாட்டுக் கழகம், ஹரியானா, பிரின்ஸ் ஆப் சாங்லா பல்கலைக்கழகம், தாய்லாந்து, இ.ஜி.எஸ். பிள்ளை பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம் மற்றும் எண்.எ.எ.எப் அக்வா ஃபார்ம், சென்னை ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

★ மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு மையமும், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமும் இணைந்து மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தின் தொழில்நுட்பங்களான ஜெயந்தி ரோகு மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் இந்திய பெருங்கெண்டைகளில் முன்கூட்டியே இனப்பெருக்கம் செய்தல் பற்றிய விழிப்புணர்வு முகாம் 04.08.2016 அன்று மன்னார்குடியில் உள்ள திருமேனி ஏரியில் நடைப்பெற்றது.

★ தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 17.06.2016 மற்றும் 18.06.2016 ஆகிய நாட்களில் இந்திய மீன்வளக் கல்வியை மறு செறிவூட்டுதல் என்ற தலைப்பில் மீன்வள வல்லுநர் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

★ கடல் துடுப்பு மீன் வளர்ப்புக்கென தனி மையம் சீனியப்பா தர்கா மண்டபத்தில் நிறுவப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.05.2015 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ சினை இறால் வங்கி கணபதிபுரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுவப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.05.2015 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ திலேப்பியா ஆராய்ச்சி மையம் பாரூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிறுவப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.05.2015 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ நன்னீர் மீன் வளர்ப்பு குளத்தில் நீர் தர மேலாண்மை என்ற ஒருநாள் விழிப்புணர்வு முகாம் 19.07.2016 அன்று உள்நாட்டு சினைமீன் மேம்பாட்டு மையம் தஞ்சாவூரில் நடைபெற்றது.

★ துடுப்புடைய மற்றும் ஓடுடைய மீன்களின் தரம் மற்றும் பாதுகாப்பில் வளர்ந்து வரும் குறைபாடுகள் என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கம் 11.08.2016 மற்றும் 12.08.2016 ஆகிய தேதிகளில் அண்ணா பல்கலைக்கழகம் சென்னையில் நடைபெற்றது.

★ இந்தியாவில் வனாமி இறால் வளர்ப்பின் பிரதிபலிப்பு மற்றும் மறு சீரமைப்பு என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கம் 11.08.2016 மற்றும் 12.08.2016 ஆகிய தேதிகளில் கிரீன் பார்க் சென்னையில் நடைபெற்றது.

• • •

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

★ வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 36 விடுதிகளுக்கு 2016–2017ஆம் ஆண்டில் ரூ.76.96 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

★ அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து விடுதிகளுக்கும் இட்லி குக்கர் – நீராவிக் கொதிக் கலன்கள் மற்றும் சலவை இயந்திரங்கள் வழங்கப்படும்.

★ தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவாறு உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/– லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மதிக்கத்தக்க சிறந்த வாழ்க்கை

இந்த மாநில மக்கள், திட்டவட்டமாக நிருவாகப் பொறுப்பை நமக்கு அளித்ததன் மூலம், இந்த அரசிடம் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். எனவே, ஏழை எளிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், மதிக்கத்தக்க, சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் அளிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

• • •

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

வணிகவரித்துறை

★ தொடர்ந்து 6ஆவது ஆண்டாக வரி இல்லா நிதிநிலை அறிக்கை தாக்கல்.

★ 2015–2016ஆம் ஆண்டு ரூ.23,968.89 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 2016–2017ஆம் ஆண்டு ரூ.25,187.51 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதி ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூ.1,218.62 கோடி வருவாய் அதிகரித்துள்ளது.

பதிவுத்துறை

★ 2016 ஏப்ரல் முதல் ஜூலை வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் 8,03,805 மற்றும் வசூலிக்கப்பட்ட வருவாய் ரூ.2,732.80 கோடி ஆகும்.

★ இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மற்றும் கடலூர் மாவட்டம் புவனகிரி ஆகிய இடங்களில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசு கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு.

• • •

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

★ கூட்டுறவு வங்கிகளால் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு 31.03.2016 அன்று வரை நிலுவையில் இருந்த கடன் தொகை ரூ.5,780.92 கோடி தள்ளுபடி செய்யப்பட உள்ளது. இதனால் 16,94,145 விவசாயிகள் பயன் பெறுவர். 2016–2017ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் திருத்த வரவு செலவு திட்டத்தில், இக்கடன் தள்ளுபடி திட்டத்திற்காக, ரூ.1,680.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

★ கொப்பரைத் தேங்காயினை டான்பெட், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு 59 ரூபாய் 50 காசுகள், பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு 62 ரூபாய் 40 காசுகள் என்ற ஆதரவு விலையில் 898 விவசாயிகளிடமிருந்து ரூ.6.93 கோடி மதிப்புள்ள 1,165.067 மெட்ரிக் டன் கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு தரும் உன்னதத் திட்டம்

“இலவச அரிசி என்பது மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய திட்டம்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

• • •

எரிசக்தித் துறை

★ தற்போதைய கணக்கீட்டு முறைப்படி 100 யூனிட் மின்சாரம் கட்டணம் ஏதுமில்லாமல் அனைத்து வீட்டு நுகர்வோர்களுக்கு வழங்க உத்தரவு. இத்திட்டத்தின் மூலம் 190.90 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் பயனடைவார்கள். இதன் காரணமாக அரசு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.1,607 கோடி மின் வாரியத்திற்கு மானியமாக வழங்கும். அரசிற்கு மொத்த மின்கட்டண வீதம் மானியம் வருடத்திற்கு ரூ.2,932 கோடி தேவைப்படும்.

★ கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது கட்டணமில்லாமல் வழங்கப்படும் 100 யூனிட்கள் மின்சாரம் 200 யூனிட்டுகளாக உயர்த்த உத்தரவு. இத்திட்டத்தின் மூலம் கூடுதலாக 31,728 கைத்தறி மின் நுகர்வோர்கள் மொத்தமாக 78,378 கைத்தறி மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள். இதன் காரணமாக அரசு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.5.97 கோடி மின் வாரியத்திற்கு மானியமாக வழங்கும்.

★ விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா 500 யூனிட்கள் மின்சாரத்தை 750 யூனிட்டுகளாக உயர்த்த உத்தரவு. இத்திட்டத்தின் மூலம், 98,712 விசைத்தறி மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள். இதன் காரணமாக அரசு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.24.08 கோடி மின் வாரியத்திற்கு மானியமாக வழங்கும்.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 05.08.2016 அன்று ரூ.242.26 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 23 துணை மின் நிலையங்களை காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மின் நுகர்வோர் புதிய தாழ்வழுத்த மின் இணைப்பிற்கான விண்ணப்பங்களை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறையை 05.08.2016 அன்று காணொலிக் காட்சி மூலமாகத் துவக்கி வைத்தார்.

★ 10.08.2016 அன்று மாண்புமிகு பாரத பிரதமர், மேதகு ரஷ்ய ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூட்டாக 1,000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அலகை (தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் பங்கு 563 மெகாவாட்) இந்திய – ரஷ்ய நட்பு மற்றும் கூட்டுறவை மேம்படுத்தும் பொருட்டு காணொலிக் காட்சி மூலமாக அர்ப்பணித்தார்கள்.

முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்

★ மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், வருடத்திற்கு 60,000 வீடுகள் வீதம் மாநிலம் முழுவதும் 2011–2012 முதல் 2015–2016 வரையான ஐந்து ஆண்டுகளில் 3 இலட்சம் சூரியசக்தி வீட்டு விளக்குகளுடனான பசுமை வீடுகள் கட்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 20–30 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் பலகைகள் ரூ.900 கோடி மதிப்பீட்டில் மேற்கூரையில் பொருத்தப்படும்.

➢ கடந்த 100 நாட்களில் 21,388 எண்ணிக்கை கொண்ட சூரியசக்தி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர்விக்கும் திட்டம்

★ 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் கிராமப்புறங்களிலுள்ள 1 இலட்சம் தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர்விக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டம் முதன்முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிறுவப்பட்டுள்ள 10–15 தெரு விளக்குகளில் உள்ள குழல் விளக்குகள் 20W (LED) மின் விளக்குகளாக மாற்றப்பட்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் கட்டமைப்புடன் கூடிய மையப்படுத்தப்பட்ட சூரிய ஒளி மின் நிலையம் மூலம் ஒளிர்விக்கப்படுகிறது.

➢ கடந்த 100 நாட்களில் 315 தெரு விளக்குகள், சூரியசக்தி மூலம் மின்னூட்டும் பணி முடிவுற்றுள்ளது.

முதலமைச்சரின் சூரிய மேற்கூரை ஊக்கத்தொகை திட்டம்

★ 1 கி.வாட். திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் கூடிய சூரிய மேற்கூரை மின் அமைப்புகளை நிறுவும் 10,000 வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு ஒரு கி.வாட்டிற்கு ரூ.20,000/– முதலீட்டு ஊக்கத்தொகை வழங்க ஆணை.

★ வீட்டு உபயோகிப்பாளர்கள், நிகர அளவு திட்டத்தின் கீழ் பயன்பாட்டிற்கு பின் மின் கட்டமைப்பில் செலுத்தும் மின்சாரத்திற்குரிய மின் வரவை பெற்றுக் கொள்ளலாம். இது தவிர வீட்டு உபயோகிப்பாளர்கள் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்த விலையில் அதிகபட்சமாக 30 விழுக்காடு மைய அரசின் நிதி உதவியை பெறலாம். இதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் இணையதளத்தின் (www.teda.in)

மூலம் ஆன் லைனில் பெறப்பட்டு முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முதல் என்ற அடிப்படையில் (first come first serve basis) ஒப்பளிப்பு.

★ தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் 29 அமைப்பாளர்கள் அமைத்தல் மற்றும் இயக்குவதற்காக பட்டியலிடப்பட்டுள்ளார்கள். கடந்த 100 நாட்களில் 361 அமைப்புகளின் மொத்த திறன் 442 Kwp இயக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் மானியம் 332 அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்:

★ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் கடந்த 100 நாட்களில் 17 மாவட்டங்களில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகங்களின் சூரிய மேற்கூரை மின் அமைப்புகளின் மொத்த திறன் 164 கிலோ வாட் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைகளில் சூரிய மின் நிலையங்கள்:

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரசு கட்டடங்களில் 7 கிலோ வாட்/10 கிலோ வாட் திறனுள்ள மேற்கூரை சூரிய சக்தி அமைப்புகள் நிறுவ திட்டமிடப்பட்டு, கடந்த 100 நாட்களில் மொத்தம் 98 கிலோ வாட் திறன்கொண்ட 14 அமைப்புகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

★ தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், 27.06.1991 அன்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமானது வங்கி சாரா நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் மின்துறைத்திட்டங்களுக்கு, குறிப்பாக, மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் விநியோக உள் கட்டமைப்புக்காக நிதியுதவி வழங்குகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இலாபம் ஈட்டி வரும் நிறுவனமாகும்.

காலவரை வைப்புத் திட்டம்

★ இந்நிறுவனம் ரூ.1,226.92 கோடியை வைப்பீடாக பெற்று 64,53,873 வைப்பீட்டாளர்களுக்கு சேவை புரிந்து வருகிறது. கடந்த ஆண்டு ரூ.12,123.46 கோடியாக இருந்த நிகர வைப்பீட்டுத் தொகை இந்நிதியாண்டில் ரூ.16,097.40 கோடியாக உயர்ந்து, முந்தைய ஆண்டை விட 32.78 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

மாநில அரசின் சில திட்டங்களுக்கான வைப்பீடுகள்

★ அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை

கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது விபத்தில் நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, அவர்கள் ஒவ்வொருவருக்கும் உதவியாக ரூ.75,000/– வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் ரூ.2.35 கோடி பள்ளிக் கல்வித் துறையால் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

★ 'முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்' கீழ், ஒரே ஒரு பெண் குழந்தைக்கு வைப்பீடாக ரூ.22,200/–மும், இரு பெண் குழந்தைகளுக்கு வைப்பீடாக தலா ரூ.15,200/– வீதம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. வைப்பீடு செய்து ஐந்தாண்டு முடிவிலிருந்து பதினெட்டாம் ஆண்டு வரை, அப்பெண் குழந்தைகளின் கல்விக்காக ஆண்டுதோறும் ஊக்கத் தொகையாக ரூ.1,800/– வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ரூ.32.44 கோடி சமூக நலத் துறையால் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை வளங்களை முறைப்படி பயன்படுத்துவோம்

"ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது இயற்கை வளங்களான கனிம வளம், நீர் வளம், நில வளம், எரிபொருள் வளம், வன வளம் ஆகியவற்றை முறைப்படி பயன்படுத்திக் கொள்வதைப் பொருத்து அமையும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிதியுதவி

★ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதியுதவியாக ரூ.4,405 கோடி வழங்கல்.

• • •

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

★ 2016–2017ஆம் ஆண்டில் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் ரூ.61.68 கோடி செலவில் மாநிலம் முழுவதும் 32 மாவட்டங்களில் 68 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

★ 31.07.2016 வரையான காலத்தில் ரூ.5.04 கோடி செலவில் 74,80,000 இலட்சம் மரக்கன்றுகள் (போக்குச் செடிகள் உள்பட) எழுப்பப்பட்டுள்ளன. வருகின்ற மழைக் காலத்தில் மரக்கன்றுகள் அனைத்தும் மாநிலத்தின் 31 மாவட்டங்களில் (சென்னை நீங்கலாக) நடவு செய்து முடிக்கப்படும். திட்டம் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

★ 2016–2017ஆம் ஆண்டில் ஈரோடு,கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று கால்நடை மருத்துவ மையங்கள் ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

★ தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாளுவதற்கான அங்கீகாரத்தினை இணையம் மூலம் பெற மென்பொருள் ஒன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் அறிமுகம் செய்துள்ளது. இதன் மென்பொருள் மூலம், இணையம் வாயிலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மேலும், தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவமனைகள் தாங்கள் சமர்பித்த விண்ணப்பங்களின் நிலையினை அவ்வப்போது இணையம் மூலம் அறிய முடியும்.

★ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஆகஸ்ட் 2016லிருந்து தொழிற்சாலைகளை, நிறுவுவதற்கான இசைவாணைகளின் செல்லுபடியாகும் கால அளவினை 2 வருடத்திலிருந்து 5 வருடமாகவும், இயக்குவதற்கான இசைவாணைகளின் கால அளவினை 1 வருடத்திலிருந்து 5 வருடமாக சிவப்பு வகை தொழிற்சாலைகளுக்கும், 4 வருடத்திலிருந்து 10 வருடமாக ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளுக்கும், 4 வருடத்திலிருந்து 14 வருடமாக பச்சை வகை தொழிற்சாலைகளுக்கும் நீட்டித்து இசைவாணை வழங்கி வருகிறது. இதன் காரணமாக தொழில் முனைவோர் இசைவாணைகளை அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்வசதி தொழில் முனைவோரிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

★ திருவள்ளூர் மாவட்டம், மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளின் சதுப்புநிலப் பகுதிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீளச் செய்ய ரூ.33 கோடி முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டு ரூ.30.23 கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.2.77 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தில் சீரும் சிறப்பும் வாய்ந்த புண்ணியத் தலங்களில் ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், திருத்தணி, பழநி, திருச்செந்தூர், தஞ்சாவூர், மருதமலை, மதுரை, சிதம்பரம், சமயபுரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர்

ஆகியவைகள் 11 முக்கியமான கோயில் நகரங்களாகும். இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்போடு பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி இத்தலங்களை சுற்றுச்சூழல் மேம்படுத்தப்பட்ட புண்ணிய தலங்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ள தலம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் வீதம் 11 தலங்களுக்கும் மொத்தம் ரூ.55 இலட்சம் விடுவிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ மாணவ சமுதாயத்தினருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நிலமாசு, நீர்மாசு, காற்றுமாசு, தொழிற்சாலைமாசு மற்றும் சூழல் முக்கியத்துவம் குறித்து 5 பிரிவுகளில் தனித்தனியே 5 குறும்படங்கள் / விளம்பரங்கள் மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு உள்ளன. இப்படங்களின் பிரதிகள் தமிழகத்தில் உள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மாணாக்கர்கள் மத்தியில் விளம்பரப்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

• • •

மரங்களைக் காப்போம்

“மரங்கள், மனித குலத்துக்குச் செய்யும் நன்மைகள், அற்புதமானவை. அந்த மரம், செடி, கொடிகளைக் காப்பது, நமது மாபெரும் கடமை. எனவே, நம்மைக் காக்கும் மரங்களை நாம் காப்போம் என்று உறுதியெடுத்துக் கொள்வோம்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

நிதித்துறை

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – 2016

★ புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 30.06.2016க்குப் பிறகு மேலும் நான்காண்டிற்கு செயல்படுத்த நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்திலும், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையான ரூ.4 இலட்சம் வரை மருத்துவ சிகிச்சையினை கட்டணமின்றிப் பெறலாம். மேலும், புற்றுநோய், கல்லீரல் மற்றும் இதர உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், திறந்த இருதய அறுவை சிகிச்சை, இருதய வால்வு மாற்று சிகிச்சை உள்ளிட்ட குறிப்பிட்ட சில சிகிச்சைகளுக்கு அனுமதிக்கப்படும் நிதியுதவி வரம்பு ரூ.7,50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவித் தொகை ஒரு கண்ணிற்கு ரூ.25,000/– ஆகவும் கருப்பை நீக்க அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவித் தொகை ரூ.45,000/– ஆகவும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்து காரணமாக, இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிகிச்சை / அறுவை சிகிச்சைகள் அவசரம் கருதி அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொண்டிருப்பினும், மருத்துவ உதவி நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மாதம் ஒன்றிற்கு ரூ.180/– வீதம் பங்குத்தொகையாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஜூலை 2016 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது.

• • •

கைத்தறி மற்றும் துணிநூல் துறை

கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்

★ 2016ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 100 அலகுகளிலிருந்து 200 அலகுகளாக உயர்த்தி வழங்க ஒப்புதல்.

விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்

★ 2016ஆம் ஆண்டு முதல் விசைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் இலவச மின்சாரம் 500 அலகுகளிலிருந்து 750 அலகுகளாக உயர்த்தி வழங்க ஒப்புதல்.

இலவச வேட்டி சேலை திட்டம் பொங்கல் 2017

★ வரும் 2017ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ரூ.487.45 கோடி மதிப்பில் 167.89 இலட்சம் சேலைகளும் 167.81 இலட்சம் வேட்டிகளும் 3.36 கோடி பயனாளிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சுமார் 11,000 கைத்தறி நெசவாளர்களுக்கும், 54,000 விசைத்தறி தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்க ஒப்புதல்.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

தள்ளுபடி மானியத் திட்டம்

★ மாநில அரசு, தள்ளுபடி மானிய திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட். (கோ–ஆப்டெக்ஸ்) ஆகியவற்றில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியமாக வழங்க இதுவரையில், ரூ.15.53 கோடி

விருப்ப கொள்முதல் முகமை

★ அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனம் மூலம் அறிவித்து சாதனை படைத்துள்ளது. இதன்மூலம் வரும் ஆண்டுகளில் இந்நிறுவனத்திற்கு பெருமளவு ஆணைகள் கிடைக்க வசதி.

• • •

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

★ தேசிய நலவாழ்வுத் திட்டத்தில், நலவாழ்வு திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசிடமிருந்து ரூ.1,540.88 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

★ இந்தியாவிலேயே தலை சிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றான சென்னை, கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், 2000ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருந்த பாம்பு விஷ முறிவு மருந்து உற்பத்தி மீண்டும் தொடங்க 16 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாம்பு விஷ முறிவு மருந்து உற்பத்தி பிரிவு, தரக் கட்டுப்பாடு மற்றும் தர உறுதி பிரிவு மற்றும் குருதி பகுப்பாய்வு பிரிவு கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.08.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் சி.ஆர்.ஆர்.ஐ. பயிற்சி மருத்துவ மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு 6 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவர் குடியிருப்பு கட்டடங்கள் திறப்பு.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திருவள்ளூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி அரசு மருத்துவமனை, அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தூத்துக்குடி மாவட்டம் – ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை ஆகிய அரசு மருத்துவமனைகளில் 21 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் 25 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 16 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள், 17 துணை சுகாதார நிலைய கட்டடங்கள்,

7 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு பிரிவு கட்டடங்கள், 9 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர்கள் குடியிருப்புகள் ஆகிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் செயல்படும் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 'ஸ்பெக்ட்–சிடி' (Single Photon Emission Computed Tomography – SPECT-CT) மருத்துவக் கருவியின் சேவை தொடக்கம்.

★ அரியலூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் 2 கோடி ரூபாய் மதிப்பில் சி.டி. ஸ்கேன் கருவியின் சேவை தொடக்கம்.

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 05.08.2016 அன்று திறந்து வைக்கப்பட்டன.

★ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 1,61,886 நோயாளிகளுக்கு 239 கோடியே 8 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை. தொகுப்பு நிதியிலிருந்து 434 நோயாளிகளுக்கு கல்லீரல், சிறுநீரகம், எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை மற்றும் காது நுண் எலும்பு கருவி பொருத்துதல் போன்ற சிறப்பு அறுவை சிகிச்சைகள்.

★ கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தலா 20 கோடி ரூபாய் என 40 கோடி ரூபாய் செலவில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல பிரிவுகள் தொடங்க நிதி ஒதுக்கீடு.

★ தாம்பரம், கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் தலா 10 கோடி ரூபாய் என 30 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த நிதி ஒதுக்கீடு

★ 12 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தவும், 9 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தவும் நிதி ஒதுக்கீடு.

★ தமிழ்நாடு, அனைத்து மாவட்டங்களிலும் கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக Common Wealth Association for Public



Administration and Management (CAPAM)-இன் தங்கப் பதக்கம் பெற்றுள்ளது.

★ பேறுகால குடும்ப அறுவை சிகிச்சையில் தமிழ்நாட்டின் சிறப்பான செயல்பாட்டிற்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு பரிசு வழங்கியுள்ளது.

★ 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்தில் 3.43 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். சென்னை மாநகராட்சியில் மட்டும் செயல்பட்டு வந்த 41 இரு சக்கர வாகன சேவை (Bike Ambulance Service), மேலும், 9 மாவட்டங்களுக்கு அதாவது கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கு விரிவாக்கம்.

★ "104" அம்மா சேவை மையம் மூலம் 2.16 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கல்.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் 2,01,533 நபர்களுக்கு 180.98 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கல்.

மருத்துவப்பணி

"அரசு மருத்துவமனைகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருப்பதையும் மருத்துவர்களும் ஏனைய சுகாதார பணியாளர்களும் தன்னலமற்ற சேவை புரிவதையும் உறுதிப்படுத்துவதே நமது பொதுவான நோக்கமாகும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ கோயம்புத்தூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி 100 மருத்துவ பட்டப் படிப்பு மாணவர்கள் சேர்க்கையுடன் 2016–2017ஆம் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை மற்றும் கல்லூரிக்கு 808 புதிய பணி இடங்கள் உருவாக்கம்.

★ சென்னை அரசு பொது மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டத்தில் 3,713 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். ●

ஒருங்கிணைந்த பணிமனை கட்டடம்,
சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை

கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகம்
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி

பாரதிதாசன் பல்கலைக்கழக மாதிரி உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காங்கேயம், திருப்பூர் மாவட்டம்

உயர்கல்வித்துறை

★ ரூ.797.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட காங்கேயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கட்டடங்கள் திறப்பு.

★ வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு ரூ.4.59 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள்.

★ 2016–2017ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் 1,683 கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்து, ரூ.25.25 கோடி ஒப்பளிப்பு.

★ 2016–2017ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி–IIஇல் பணியாற்றும் 1,661 கௌரவ விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியம் வழங்கும் பொருட்டு அரசு ரூ.24,92 கோடி ஒப்பளிப்பு.

★ அணு ஆற்றல் மீதான தவறான எண்ணங்களை நீக்கி அணு ஆற்றல் சமுதாயத்தின் ஆக்கப்பூர்வமான பயன்பாடுகளுக்கு உபயோகப்படும் வழிமுறைகளை விளக்கவும் அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம் (Hall of Nuclear Power) ஒன்று, இந்திய அரசின் அணுக்கரு ஆற்றல் கழகத்தின் (Nuclear Power Corporation of India Limited) நிதி உதவியுடன் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைத்து திறப்பு.

★ சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒரு புதுமை படைப்புக்களம் அமைத்து திறப்பு.

★ ரூ.1 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (Defence Research and Development Organisation) ஒத்துழைப்புடன் "இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி காட்சிக்கூடம்" சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் நிர்மாணிக்கப்பட்டு திறப்பு.

★ திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில், ரூ.70 இலட்சம் செலவில், ஒரு பரிணாம வளர்ச்சி பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதில், ஓர் செல் உயிரினத்திலிருந்து மனிதனின் பரிணாம வளர்ச்சி வரை, அறிவியல் காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில மாதிரிகள், கை, தலை, கால்களை அசைக்கும் தன்மையுடைவைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் முதல் முதுகெலும்பில்லாத மற்றும் முதுகெலும்புள்ள, நில நீர் வாழ்வன, ஊர்வன, பறவை தோற்றம், பாலூட்டிகள், மனித குரங்கு மற்றும் மனிதர்களின் பரிணாம வளர்ச்சி காட்சிக்கு வைக்கப்பட்டு திறப்பு.

★ அறிவியல் நகரம், சிறார் அறிவியல் அகாடமி விருது வென்ற மாணாக்கர்களுக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் "அறிவியல் முகாம்" நடத்தியது. இம்முகாமில் தலைசிறந்த அறிவியலாளர்களால் விரிவுரைகள் வழங்கப்பட்டு ஆய்வுக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் 52 மாணாக்கர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

★ அறிவியல் நகரம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பொது அறிவியல் துறைகளில் 21நாள் "கோடைகால பயிற்சி முகாம்" முதுநிலை அறிவியல் பட்டம் பயிலும் மாணவர்களுக்காக நடத்தியது. இப்பயிற்சி முகாம்களில் ஊரகக் கல்லூரிகளில் பயிலும் 90 மாணவர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர். இதற்கான மொத்த செலவினம் ரூ.4.50 இலட்சம் ஆகும்.

கல்வி வளர்ச்சி பெற வேண்டும்

"தமிழகம் வீறு பெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ அறிவியல் நகரம், 12.07.2016 அன்று, அரசுப் பள்ளி மற்றும் அரசுக் கல்லூரியில் பயிலும் மாணக்கர்களுக்காக ரூ.0.50 இலட்சம் செலவில் "நோய் தடுப்பு மற்றும் தடுப்பூசிகள்" என்ற தலைப்பில் ஒருநாள் விழிப்புணர்வு முகாம் நடத்தியது. இதில் 150 அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் 100 அரசுக் கல்லூரி மாணாக்கர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

★ மாணாக்கர்கள் அறிவியலை புரிந்துணர்ந்து திறம்பட கற்கவும் மற்றும் அறிவியல் அறிவினை மேம்படுத்திக் கொள்ளவும், ஒருநாள் அறிவியலில் செயல்முறை பட்டறையினை ரூ.1.20 இலட்சம் செலவில் "எனக்கும் தெரியும் அறிவியல்" என்ற தலைப்பின் கீழ் அறிவியல் வல்லுநர்களைக் கொண்டு 22.07.2016 அன்று அறிவியல் நகரம் நடத்தியது. இச்செயல்முறை பயிற்சிப் பட்டறைக்கு அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் 100 மாணாக்கர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

• • •

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

★ சாலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 350 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.32.26 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ பகுதி–II திட்டத்தின் கீழ், 9 கட்டட பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ உலக வங்கி நிதி உதவியுடன் தமிழகத்தில் சாலைப் போக்குவரத்து அதிகமுள்ள 427 கி.மீ நீளமுள்ள 11 சாலைகள் கண்டறியப்பட்டு, அச்சாலைகளை மேம்பாடு செய்யும் பணியினை 10 தொகுப்புகளாக பிரித்து பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறை மூலம் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றில் 75.5 கி.மீ நீளத்திற்கு தார் சாலைகள் (DBM) மற்றும் 46 சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.1,046.07 கோடி செலவில் 3,895 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் ரூ.72.98 கோடி செலவில் 160 பாலம் / சிறுபாலம் / பாதுகாப்பு பணிகள்.

★ ரூ.46.20 கோடி செலவில் 539 கி.மீ. நீள சாலையில் புதுப்பிக்கும் பணிகள்.

★ தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகள் (திட்டப் பணிகள்) திட்டத்தின் கீழ், ரூ.146.50 கோடி செலவில் ஒரு சாலைப் பணியும் ஒரு பாலப் பணியும் முடிக்கப்பட்டுள்ளது.

★ திட்டம் சாராப் பணிகள் (**PR/IRQP**) திட்டத்தின் கீழ், 129.90 கி.மீ. நீள 6 சாலைப் பணிகள் ரூ.74.37 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

★ புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டம் திட்டத்தின் கீழ், 299.35 கி.மீ. நீள 49 சாலைப் பணிகள் ரூ.65.83 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

★ பிரதமந்திரி சாலை மேம்பாட்டுத் திட்டம் (பகுதி IX) திட்டத்தின் கீழ், 109.61 கி.மீ நீள 37 சாலைப் பணிகள் ரூ.6.08 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.52.54 கோடி மதிப்பில் கூடுவாஞ்சேரி, சிங்காநல்லூர் அருகே சாலை மேம்பால பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ நபார்டு கடனுதவியுடன் 59.50 கி.மீ. (54 கி.மீ. உறுதிப்படுத்துதல் மற்றும் 5.50 கி.மீ. அகலப்படுத்துதல்) நீளமுள்ள 25 சாலைகள் ரூ.2,445.05 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் 15 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன்.

★ நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகின் மூலமாக நபார்டு கடனுதவியுடன் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ் 21 பாலங்கள் ரூ.6,852.52 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டதன் மூலம் 16 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன்.

★ நபார்டு கடனுதவியுடன் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ், ரூ.74.03 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ ரூ.147.38 கோடி மதிப்பிலான 47 பாலப் பணிகளுக்கான கருத்துரு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள சாலைகள், சிறு பாலங்கள் மற்றும் தடுப்புச் சுவர்களை சீரமைக்க ரூ54.06 கோடி மதிப்பில் கருத்துரு அனுப்பப்பட்டு ஒப்புதல்.

★ 2016–2017ஆம் நிதியாண்டில் ரூ159.74 கோடி மதிப்பில் 80 பாலப்பணிகளுக்கான கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம்

★ ஆண்டுக்கு 259.88 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் சுமார் 40.13 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வந்துள்ளது.

★ கன்னியாகுமரியில் 3 படகுகளின் மூலம் சுமார் 3.63 இலட்சம் பயணிகள் பயணம் செய்ததின் பயனாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் ரூ.121.23 இலட்சம் கட்டண வருவாய் ஈட்டியுள்ளது.

• • •

எனது இலட்சியம்

“தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்குவது மட்டுமல்லாமல், விரைந்த வளர்ச்சி எய்தும் நடுத்தர வருவாய் நாடுகளுக்கு இணையாகத் தமிழகத்தின் வளர்ச்சி இருத்தல் வேண்டும் என்பதே எனது இலட்சியம் ஆகும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

காவல்துறை

★ தமிழக காவல்துறையில் உள்ள 13,137 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களை நிரப்ப அரசாணை.

★ சமுதாயத்தால் ஒடுக்கப்பட்ட இனமாக இருந்து வந்த மூன்றாம் பாலினத்தினர் இனிவருங்காலங்களில் தமிழக காவல்துறையில் பணிபுரியும் வகையில் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி ஆணை.

★ பத்து எல்லையோர மாவட்டங்களில் நக்சலைட் சிறப்பு பணி பிரிவு தோற்றுவிக்க, ரூ.6.35 கோடி நிதி ஒப்பளிப்பு.

★ குடிமக்கள் பயன்பாட்டிற்காக தமிழக காவல் துறையின் கைப்பேசி செயலி (Mobile App) 27.07.2016 அன்று முதல் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இணைய வழி புகார் பதிவு செய்தல், முதல் தகவல் அறிக்கை (FIR) நிலை அறிதல், சமுதாயப் பதிவேடு (CSR) நிலை அறிதல், இணைய வழியில் அளிக்கப்பட்ட புகாரின் நிலை குறித்து அறிதல், வாகனங்கள் குற்ற வழக்குகளுடன் தொடர்புடையதா/ திருடப்பட்ட வாகனமா என்பதை அறிதல் ஆகிய வசதிகள் குடிமக்களுக்கு வழங்கப்படுகிறது.

★ தமிழக காவல்துறைக்கென பாதுகாப்பான மற்றும் பிரத்தியேகமான CCTNS மின்னஞ்சல் சேவையானது 02.06.2016 முதல் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

★ கணினியில் வண்ண வரைபடம் வரைவதற்கான மென்பொருளானது (CPBS) குற்றவாளிகளின் மாதிரித் தோற்றத்தினை வரைவதற்கு உருவாக்கப்பட்டது. இம்மென்பொருளை உபயோகப்படுத்தி ஒரு கொலை வழக்கு கண்டுபிடிக்கப்பட்டது.

கட்டடப்பிரிவு

★ மதுரை மாவட்டத்தில் அஸ்டின்பட்டி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட ரூ.78.93 இலட்சம் செலவில் ஆணை.

★ திருப்பூர் மாநகரக் காவல் ஆணையாளர் அலுவலக கட்டடம் கட்ட இந்து சமய அறநிலைய துறையிடமிருந்து ரூ.3.14 கோடி செலவில் நிலம் வாங்க ஆணை வெளியிடப்பட்டது.

★ மதுரை மாவட்டத்தில் உள்ள ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து ரூ.31.55 இலட்சம் செலவில் நிலம் வாங்க ஆணை.

★ திருச்சி மாவட்டத்தில் உள்ள கல்லுகுழி இருப்புப்பாதை காவல் நிலைய குடியிருப்பை சுற்றி ரூ.5.61 இலட்சம் செலவில் பாதுகாப்பு சுவர் அமைக்க ஆணை.

★ சென்னை மாநகரில் உள்ள D3 ஐஸ் அவுஸ் காவல் நிலையத்திற்கு ரூ.49.66 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்ட ஆணை.

★ பெரம்பலூர் மாவட்டத்தில், காவல் கண்காணிப்பாளருக்கு ரூ.41.91 இலட்சம் செலவில் குடியிருப்பு கட்ட ஆணை.

★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள காவலர் பயிற்சி பள்ளி அமைப்பதற்காக ரூ.6.67 கோடி செலவில் மைலம் ஊராட்சிக்கு சொந்தமான 12.35.0 ஹெக்டேர் நிலத்தை காவல் துறைக்கு நில மாற்றம் செய்ய ஆணை.

★ பொருளாதார குற்றங்களை தடுக்கும் பொருட்டும், ஏழை எளிய மக்கள் போலியான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து தங்கள் பணத்தை இழக்காமல் இருக்கும் பொருட்டும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 7 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு அரசு செய்தி துறை மூலம் திரையரங்குகளில் ஒளிபரப்ப நடவடிக்கை.

★ மேலும், இக்குறும்படங்கள் மக்கள் கூடும் இடங்களிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்படுகிறது. இந்த 7 குறும்படங்கள் சமூக வலைதளங்களில் அதிக நபர்களால் பார்க்கப்படுகிறது.

★ நிதி நிறுவனங்கள் குறித்து பொது மக்கள் தவவல் பெறுவதற்கு “ஊடாடும் குரல் பதிவு’’ (Interactive Voice Response System- IVRS) திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் தான் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ 4 நீதிமன்ற பிடியாணைகளின் பேரில் சோதனை நடத்தப்பட்டு ரூ.200 கோடி மதிப்புள்ள களவாடப்பட்ட, சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதன மதிப்புள்ள சிலைகள்/ கலை பொருட்கள் சிலை தடுப்பு பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

போக்குவரத்து துறை

சாலைப் பாதுகாப்பு :

★ பொறியியல் சாராத சாலைப் பாதுகாப்பு பணிகளுக்காக 20 மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.10.22 கோடி நிதியும், சென்னை காவல் ஆணையருக்கு ரூ.4.48 கோடி நிதியும் ஒப்புதல்.

★ சென்னை காவல் துறை ஆணையர் அவர்களுக்கு சென்னை நகரில் பழுது அடைந்துள்ள சமிக்கை கருவிகளை பராமரிக்க மற்றும் பழுது நீக்க ரூ.53 இலட்சம் மற்றும் ரூ.56 இலட்சம் நிதி ஒப்புதல்.

★ சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம் ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள கூடுதல் காவல் துறை இயக்குநர் (தொழில் நுட்பம்) அவர்களுக்கு ரூ.38 இலட்சம் நிதி ஒப்புதல்.

★ ஒவ்வொரு ஆண்டும் சாலை பாதுகாப்பு வார விழாக்களில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த 32 மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.1.28 கோடி நிதி ஒப்புதல்.

★ திருவள்ளூர் மாவட்டம் பெத்திக்குப்பம் சோதனைச் சாவடியை நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியாக மாற்ற மேம்படுத்தப்பட்ட மென்பொருள் நிறுவுவதற்கு ரூ.5.63 கோடி நிதி ஒப்புதல்.

சிறைத்துறை

★ காணொலிக் காட்சி மூலம் சிறைவாசிகளை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தும் வசதியினை 44 நீதிமன்ற வளாகங்களிலுள்ள 51 நீதிமன்றங்களை இணைக்கும் வகையில் ரூ.5.23 கோடி செலவில் விரிவுபடுத்திட ஆணை.

★ சிறைச்சாலைகளில் 100 கூடுதல் கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் ஐ.பி. கேமிராக்கள் பொருத்திடவும், இச்சிறைகளிலுள்ள சிறைவாசிகளின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய Smart card வழங்கும் முறையினை ரூ.4 கோடி செலவில் அனைத்து மத்தியசிறை, பெண்கள் தனிச்சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில் அறிமுகப்படுத்திட ஆணை.

★ சிறைத் தொழிற்கூடங்களுக்கு புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கும் மற்றும் இயங்கிவரும் இயந்திரங்களை பராமரித்திடவும் ரூ.200 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சிறைச்சாலைகளின் பாதுகாப்பினை கருதி, புதியதாக 380 வாக்கி – டாக்கி கருவிகள் ரூ.80.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்ய ஆணை.

★ சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவருக்கு , புழல் மத்தியசிறை வளாகத்தில் ரூ.50.00 இலட்சம் செலவில் குடியிருப்பு கட்டுவதற்கு ஆணை.

★ சிறைத்துறை தலைமை அலுவலகம், 9 மத்தியசிறைகள், 3 பெண்கள் தனிச்சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு 80 கணினிகள், லேசர் அச்சுப் பொறிகள் மற்றும் யு.பி.எஸ் உபகரணங்கள் ரூ.47.49 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஆணை.

★ கிளைச்சிறைகள், தனிக் கிளைச்சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் திறந்த வெளிச்சிறைகளுக்கும் எடுத்துச் செல்லத்தக்க மின்னாக்கி இயந்திரங்களை ரூ.41.70 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஆணை.

★ அவசர காலத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தினை உயர்த்தி வழங்கிட ரூ.14.73 இலட்சம் வழங்கி ஆணை.

★ கோவை மத்திய சிறையின் நெசவுக் கூடத்திலுள்ள அளவிடல் இயந்திரங்களை ரூ.9.87 இலட்சம் செலவில் மேம்படுத்திட ஆணை.

★ கடலூர் மற்றும் திருச்சி மத்தியசிறையில் உள்ள தையல் தொழிற்கூடங்களை ரூ.6.22 இலட்சம் செலவில் விரிவுபடுத்திட ஆணை.

★ 3 பெண்கள் கிளைச் சிறைகளான, கிருஷ்ணகிரி, சாத்தூர் மற்றும் தக்கலையில் குடிநீர் வசதிக்கென சவ்வூடு பரவல் முறையில் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரங்கள் ரூ.1.39 இலட்சம் செலவில் நிறுவிட ஆணை.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

★ 1,512 தீயணைப்போர் பணியிடங்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்புவதற்கு ஒப்புதல்.

★ 15 ஆண்டு காலத்திற்கு மேல் உழைத்துள்ள பழைய நீர்தாங்கி வண்டிகளுக்கு பதிலீடு ஊர்திகள் கொள்முதல் செய்வதற்காக ரூ.4.50 கோடி நிதிக்கு செலவின அங்கீகாரம்.

★ முக்கியமான தொழிற்பேட்டைகள் அமைந்துள்ள நகரங்களான தாம்பரம் (தென்சென்னை), தண்டையார்பேட்டை (வடசென்னை), ஓசூர்–சிப்காட் (கிருட்டிணகிரி), மற்றும் திருமங்கலம் (மதுரை) ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலைய பயன்பாட்டிற்காக நான்கு சிறிய நுரை தகர்வு ஊர்திகள் கொள்முதல் செய்வதற்காக ரூ.1.52 கோடி நிதிக்கு செலவின அங்கீகாரம்.

★ கோயம்புத்தூர் (மேற்கு மண்டலம்), மதுரை (தென்மண்டலம்), திருச்சிராப்பள்ளி (மத்திய மண்டலம்) மற்றும் வேலூர் (வடமேற்கு மண்டலம்) ஆகிய நான்கு மண்டலங்களில் தகவல் தொடர்பினை மேம்படுத்துவதற்காக தலா 30 எண்ணிக்கைகளில் நடந்துக் கொண்டே பேசும் வான்தந்தி கருவிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக மொத்த செலவினத் தொகை ரூ.90 இலட்சம் நிதிக்கு செலவின அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ நிலைய அலுவலர்களுக்கு அவர்தம் பணியினை செவ்வனே செய்ய படிப்படியாக அனைத்து அலுவலர்களுக்கும் வழங்குவதற்காக முதற்கட்டமாக 50 விசைமிதிகளை கொள்முதல் செய்வதற்காக ரூ.30 இலட்சம் நிதிக்கு செலவின அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு சேவையினை பாதுகாப்பாக மேற்கொள்ளும் வகையில் தனிநபர் தீ பாதுகாப்பு உடைகள் மொத்தம் 1,000 எண்ணிக்கைகளை கொள்முதல் செய்வதற்காக ரூ.5 கோடி நிதிக்கு செலவின அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை பெருநகரத்தில் பல்கிபெருகி வரும் பலமாடிக் கட்டடங்களில் ஏற்படக்கூடிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி சேவைகளை எதிர்நோக்கும் வகையில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை பயன்பாட்டிற்காக 54 மீட்டர் உயரம் வரை செல்லக்கூடிய ஒரு நீட்டிப்பு ஏணி சிறப்பு ஊர்தி மற்றும் 104 மீட்டர் வரை உயரம் சென்று தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி சேவைகளை எதிர்கொள்ளும் வகையில் செயலாற்றக் கூடிய இரண்டு 104 மீட்டர் நீட்டிப்பு ஏணிகள் கொள்முதல்.

குற்ற வழக்கு தொடர்புத் துறை

★ 2015–2016ஆம் ஆண்டுக்கு, நிலை 1 அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் பதவி உயர்வுக்குத் தகுதியுள்ள 68 நிலை–2 அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்களின் தற்காலிகத் தேர்ந்தோர் பட்டியல் வெளியீடு.

★ இவ்வியக்குநகரத்தின் பயன்பாட்டிற்காக 8 புதிய கணினிகள் வாங்குவதற்கு ரூ.4.61 இலட்சம் செலவினத்திற்கு ஒப்புதல்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

★ மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் முகாம்கள் நடத்த ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும், கள்ளச்சாராயம் மற்றும் போலி மது விற்பனையில் ஈடுபட்டு மனந்திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதியாக ரூ.5 கோடி மானியம்.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம்

★ ரூ.37.70 கோடி செலவில் 87 காவலர் குடியிருப்புகள், கட்டடங்கள் மற்றும் காவல் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில வாணிப கழகம்

★ மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்படும் என்றும், அதனை நிறைவேற்றும் வகையில் சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரம் மற்றும் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி, டாஸ்மாக் சில்லறை விற்பனை மதுபானக்கடைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த பார்கள் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை இயங்கி வந்த நிலையில் 24.05.2016 முதல் நண்பகல் 12 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இயங்கும் என்ற உத்தரவும், மற்றும் 500 டாஸ்மாக் சில்லறை விற்பனை மதுபானக்கடைகள் மூடப்படும் என்ற உத்தரவும், பிறப்பிக்கப்பட்டது. அதன்படி டாஸ்மாக் கடைகள் 24.05.2016 முதல் நண்பகல் 12 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இயங்கி வருகின்றன. மேலும், 500 சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 19.06.2016 முதல் மூடப்பட்டன.

★ மூடப்பட்ட மதுபானக் கடைகளில், பணிபுரிந்த பணியாளர்கள் டாஸ்மாக் நிறுவனத்திலேயே தகுந்த இடங்களில் மீளப் பணியமர்த்தப்பட்டார்கள்.

நீதிமன்றங்கள்

★ சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர்களுக்கு 6 ஆப்பிள் ஐ பேடு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.4.26 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள அனைத்து கோப்புகளையும் கணினிமயமாக்குவதற்காக

கணினிகள் மற்றும் கணினி சார்ந்த உபகரணங்கள் மற்றும் விளம்பர செலவுகளுக்காக ரூ.1.04 கோடி ஒப்பளிப்பு.

★ சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குக் கோப்புகளை பிரிவுகளிலிருந்து வழக்குக் கூடத்திற்கும் பின்பு பிரிவுகளுக்கும் கோப்புகளை கொண்டு செல்வதற்கு 47 சிறியவகை தள்ளு வண்டிகள் வாங்குவதற்கு ரூ.8.44 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் இல்ல அலுவலகங்களுக்கு 60 கணினிகள், 60 லேசர் அச்சுப் பொறிகள் மற்றும் 60 யூபிஎஸ் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.43.99 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு 32 ‘சிஸ்கோ’ மின்விசை மாற்றுக் குமிழ்கள் வாங்குவதற்கு ரூ.40.18 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற பயன்பாட்டிற்கு கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.1.75 கோடி ஒப்பளிப்பு.

★ திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் குறும்பரப்பு வலையமைப்பு வசதி ஏற்படுத்துவதற்கு ரூ.15.85 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள இரு பதிவாளர்களுக்கு (Judiciary &Statistics) இரண்டு மகிழுந்துகள் வாங்குவதற்கு ரூ.19.08 இலட்சம் ஒப்பளிப்பு.

★ தலைமை நீதிபதி மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையிலுள்ள 5 நீதிபதிகளுக்கு குடியிருப்பு மாளிகைகள் கட்டுவதற்கும் மற்றும் தலைமை நீதிபதியின் குடியிருப்புக்கு கூடுதல் வசதிகள் அளிப்பதற்கும் ரூ.413.60 இலட்சம் ஒப்பளிப்பு.

★ உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் பிற மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தில் விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு ரூ.284.3 இலட்சம் ஒப்பளிப்பு.

★ தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் நீதிமன்ற குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.555.28 இலட்சம் ஒப்பளிப்பு.

★ சென்னை, சைதாப்பேட்டையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுவதற்கு ரூ.635.80 இலட்சம் ஒப்பளிப்பு.

ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள்

“குற்றங்களை காவல் துறையினர் கட்டுப்படுத்த வேண்டும் என்று தான் எதிர்பார்க்க முடியும். சர்க்கரை வியாதியை கட்டுப்படுத்துவதைப் போல குற்றங்களைக் கட்டுப்படுத்தத் தான் முடியுமே தவிர, இளம்பிள்ளை வாதம் அல்லது பெரியம்மையை ஒழிப்பது போன்று முற்றிலும் ஒழிக்க முடியாது. குற்றங்களை குறைக்க வேண்டுமென்றால், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தருவதோடு ஆக்கப்பூர்வமான தடுப்பு நடவடிக்கைகள் மூலம் குற்றங்கள் புரிவதற்கான வாய்ப்புகளைக் குறைக்க வேண்டும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- ★ தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு புதிய சிற்றுந்து வாங்குவதற்கு ரூ.11.01 இலட்சம் ஒப்பளிப்பு.
- ★ புதியதாக நியமிக்கப்பட்டுள்ள உரிமையில் நீதிபதிகளுக்கு (2015 Batch) தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தில் பயிற்சி (induction training programme) அளிப்பதற்கு ரூ.6 இலட்சம் ஒப்பளிப்பு.
- ★ சென்னை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் / சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் / குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (சிவகங்கை) ஆகிய நீதிமன்றங்களுக்கு 21 வெவ்வேறு நிலைகளில் கூடுதல் பணியாளர்கள் ரூ.57.09 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு.
- ★ சென்னையில் இயங்கி வரும் 4 விடுமுறைகால குடும்ப நல நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கு மதிப்பூதியம் வழங்குவதற்கு ரூ.23.69 இலட்சம் ஒப்பளிப்பு.
- ★ திண்டுக்கலில் இயங்கி வரும் மாவட்ட முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு ஒளிநகல் கருவி வாங்குவதற்கு ரூ.1.21 இலட்சம் ஒப்பளிப்பு.
- ★ சென்னையில் இயங்கி வரும் குடும்ப நல நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குவதற்கு ரூ.18.53 இலட்சம் ஒப்பளிப்பு.

• • •

காவல்துறை

காவல்துறை என்பது மாநிலத்தினுடைய அதிகாரத்தின் கண்கூடாகத் தெரிகிற ஓர் அடையாளம் ஆகும். காவல்துறையினர் மீது பாமர மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைப்பதை உறுதி செய்வது நமது அனைவரின் ஒருமித்த முயற்சியாகும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் ரூ.70.74 கோடி மதிப்பீட்டில் 720 புதிய அலகுகளுக்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உச்சப்பட்டி தோப்பூர் துணைக்கோள் நகரில் அபிவிருத்திப் பணிகளான அணுகு சாலை, மழைநீர் வடிகால் சாலைகள், பூங்காக்கள், சமுதாய மேம்பாட்டுக் கூடம், வணிக வளாகம் மற்றும் தெருவிளக்கு ஆகிய பணிகள் ரூ.92 கோடியில் திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.14.56 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திருமழிசை துணைக்கோள் நகரத்திட்டத்தில் அணுகுசாலை அமைக்கும்பணி, திட்ட உட்சாலைகள், தடுப்பு சுவர் அமைக்கும் பணி மற்றும் மண் நிரப்பும் பணி, பாலம் கட்ட ஆயத்த பணிகள் ஆகிய பணிகள் ரூ.114.18 கோடியில் திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.19.14 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ ஈரோட்டில் ரூ.73 கோடி மதிப்பீட்டில் 1,072 குடிசைமாற்று குடியிருப்புகளின் மறுகட்டுமான பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 05.08.2016இல் பெறப்பட்டு பணி ஆணை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வழங்கப்படவுள்ளது.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் 23 மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் 775 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் 897 அலகுகள் ரூ.139.38 கோடி மதிப்பீட்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் தொலைநோக்கு திட்டம் 2023 / அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 12 நகரங்களில் 22 திட்டப்பகுதிகளில் 1,328 குடியிருப்புகள் மற்றும் 9,158 வீடுகள் ரூ.384.30 கோடி செலவில் கட்டவும், மைய அரசு மானியம் ரூ.157.29 கோடி பெறவும் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

★ ரூ.111.90 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் பல்வேறு திட்டங்களின்கீழ் சென்னை, கடலூர் மற்றும் பல்வேறு பேரூராட்சிகளில் 2,996 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னையில் 112 திட்டப்பகுதிகளில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.3.90 கோடி செலவில் சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கழுகுமலை, சுவாமிமலை ஆகிய 2 புராதன நகரங்களுக்கு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக ரூ.103.87 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது.

★ போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அருப்புக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் ஆகிய 2 நகராட்சிகளுக்கு ரூ.115.15 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரம் மேம்பட

“செவ்விய முறையில் திட்டமிடல், மின்சாரம், சாலைகள், நகர்ப்புற வசதிகள், இருமடங்கு ஆதரவுக் கொள்கையுடனான வீட்டு வசதிகள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை பொருளாதார மேம்பாட்டிற்கு மிக முக்கியமானவையாகும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ அருப்புக்கோட்டை (2), படைவீடு, சோளிங்கர், சின்னசேலம், முசிறி, தாரமங்கலம், குளச்சல் மற்றும் தாளியூர்ஆகிய 9 பூங்காக்களுக்கு ரூ.69.43 இலட்சம் பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளது.

★ நாமக்கல் சரக்கு இரயில் லாரி கட்டுமான தனி தொழிற்பேட்டை அமைத்தலுக்காக ரூ.5.85 கோடி இரண்டாவது தவணை தொகை உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

★ சென்னை பெருநகர எல்லைக்குள் கட்டடம் கட்டும் விண்ணப்பதாரர்களுக்கு திட்ட அனுமதி வழங்கும் நடைமுறையை எளிமைப்படுத்தி, விண்ணப்பித்த 45 நாட்களுக்குள் கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைக்கு ஏதுவாக விண்ணப்பிக்கும்போது சம்பந்தப்பட்ட மனை, நீர்ப்பிடிப்பு மற்றும் பல்வேறு துறைகளின் நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் இல்லை என வருவாய்த்துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெறும் முறையிலிருந்து விலக்களித்து, இந்த விவரங்களை குழுமத்திலுள்ள தகவல் தொகுப்பிலிருந்தே ஆய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

• • •

தொழில் துறை

★ சிப்காட் நிறுவனம், 27 தொழில் நிறுவனங்களுக்கு 86.92 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, ரூ.65,128 இலட்சம் முதலீட்டினை ஈர்த்துள்ளதோடு, சுமார் 5,406 நபர்களுக்கு வேலை வாய்ப்பினையும் உருவாக்கியுள்ளது.

★ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான 3 சதவீத வட்டி மானியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ரூ.146.50 கோடி கடன் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) மூலம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 267 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

★ படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் பொருட்டு, தமிழ் நாடு அரசு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் (NEEDS) 12 பயனீட்டாளர்களுக்கு ரூ.6.38 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ மின்னாக்கி மானியத் திட்டத்தின் கீழ், 6 பயனீட்டாளர்களுக்கு மின்னாக்கி மானியமாக ரூ.35.68 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

★ “அம்மா உப்பு” திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 9,980 டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு உப்பு நிறுவனம், 97,005 டன் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்துள்ளது.

★ வெளிச் சந்தையில் விற்கப்படும் சிமெண்ட் விலையேற்றத்தினால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், சலுகை விலையில் சிமெண்ட் விற்பனை செய்யும் “அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்” தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு சிமெண்ட் மூட்டை ஒன்றுக்கு ரூ.190/– என்ற சலுகை விலையில் விற்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2,19,680 (43,93,600 மூட்டைகள்) டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், 46,424 டன் சிமெண்ட்டினை திறந்த வெளி சந்தையில் விற்பனை செய்துள்ளது.

• • •

தமிழகம் எதிலும் முதலிடம்

“இந்தியாவிலேயே, முதலீட்டாளர்கள் நாடுகின்ற, முதன்மையான இடமாகத் தமிழகத்தை ஆக்குவதே இந்த அரசின் இலட்சியமாகும். முதலிடம் என்று நான் குறிப்பிடுவது முதலீட்டைப் பொறுத்த வரையில் மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மிக முக்கியமாக நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே எனது இலட்சியம்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



தகவல் தொழில்நுட்பவியல் துறை

★ 05.08.2016 அன்று தமிழ்நாடு மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

★ இத்தகவல் தொகுப்பு மையத்தின் தரவுத் தளத்தினை தமிழக மக்களுக்கு சேவை அளிக்கும் அனைத்துத் துறைகளும் பயன்படுத்த இயலும். இதன் மூலம் அரசின் திட்டங்களுக்கான இலக்குகளை நிர்ணயிக்கவும் சிறப்பான முறையில் சேவை அளிக்கவும், சிறப்பான முறையில் திட்டங்களைக் கண்காணிக்கவும் முடியும். இத்திட்டம் 30.25 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

★ ரூ.132.80 இலட்சம் செலவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 05.08.2016 அன்று தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பினை தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

★ புவிசார் தகவல் அமைப்பின் மூலம், இடம் சார் (Spatial) மற்றும் இடம் சாராத (Non-Spatial) தரவுகளை இணைத்து அரசு துறைகளின் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்யவும், நிர்வகிக்கவும் இயலும். அனைத்து துறைகளிடம் உள்ள புவி சார் தரவுகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுத்து அவற்றை தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு உடன் இணைக்கப்பட்டு வருகின்றது அரசின் 9 துறைகளிடம் இருந்து பெறப்பட்ட புவி சார் தரவுகளை, 42 புவி சார் அடுக்குகளாக தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பிற்கான இணையதள பயன்பாட்டில் (Web based TNGIS Application) இணைத்து தமிழ்நாடு மாநில தகவல் மையத்தில் (BSNL-SDC) நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

★ தமிழக அரசு மாநில மின்னாளுமை திட்டத்தின் கீழ் 14 துறைகளை தேர்வு செய்து அவற்றின் சேவைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளது.

★ தற்போது பல்வேறு துறைகளை உள்ளடக்கிய மின்மாவட்டத் திட்டத்தின் கீழ் 92 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 300 சேவைகளை மின்மாவட்டத் திட்டத்தின் கீழ் வழங்கும் பொருட்டு அரசு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ தமிழ் இணையக் கல்விக் கழகத்தின், தமிழ் மின்நிகண்டில் இதுவரையில் 11,000 கலைச்சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

★ கணித்தமிழ் சார்ந்த ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள

85 உயர்கல்வி நிறுவனங்களில் கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கப் பெற்றுள்ளன.

- ★ தமிழில் பல்துறைக் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் 210 பிரிவுகளில் 9,000க்கும் மேற்பட்ட கட்டுரைகள் தரவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன அவைகளை தமிழ்க் களஞ்சியம் (http://www.tamilkalanjiyam.in) என்னும் இணைய தளத்தில் காணலாம்.
- ★ மாணவர்களின் கற்றல் முறையை எளிதாக்க கான் கல்விக் கழக ஆங்கில வடிவ காணொளிகளில், 459 காணொளிகள் தமிழில் உருவாக்கம்.
- ★ தமிழ் இணையக் கல்விக்கழகம் உலகத் தரமான தமிழ் இலக்கியங்களில் இருந்து 120 மில்லியன் சொற்களைக் கொண்ட தமிழ் தரவகத்தை உருவாக்கியுள்ளது.
- ★ தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டங்களுக்கு கடந்த 100 நாட்களில் பதிவு செய்தோர் விவரம்: சான்றிதழ்–106, மேற்சான்றிதழ்–23, பட்டம்–32.
- ★ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நடத்தப்படும் அரசு இ–சேவை மையங்களில் புதிய சேவைகளான புகைப்படத்துடன் கூடிய ஆதார் பதிவு எண் (Aadhaar Enrolment) வழங்கும் சேவைகள் துவங்க அரசின் ஆணை பெறப்பட்டுள்ளது.
- ★ மேலும் அரசு இ–சேவை மையங்களில் ஏற்கெனவே பதிவு பெற்றுள்ள வாக்காளர்களுக்கு பிளாஸ்டிக் வண்ண வாக்காளர் அடையாள அட்டை (Replacement EPIC) அச்சிட்டு வழங்கும் சேவைகள் துவங்க தேர்தல் ஆணையத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதற்கான பிளாஸ்டிக் வண்ண அட்டை அச்சடிக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

• • •

தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

தொழிலாளர் நலத்துறை

★ 957 தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. 391 வழக்குகள் சுமூகமான முறையில் முடிக்கப்பட்டன.

★ பொறியியல் நிறுவனம் ஒன்றில் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு, 56 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது. 92 தொழிலாளர்களை கொண்ட 1 பொறியியல் நிறுவனம் ஒன்றில் கதவடைப்பு வழக்கு முடிக்கப்பட்டது.

★ சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் 78,723 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.27.21 இலட்சம் இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டு ரூ.687.60 இலட்சம் முத்திரை கட்டணமாக பெறப்பட்டுள்ளது.

★ சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 29,894 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.23.86 இலட்சம் இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டு ரூ.1.42 இலட்சம் பதிவுக் கட்டணமாகவும் பெறப்பட்டுள்ளது.

★ சட்ட அமுலாக்க அலுவலர்கள் மூலம் 40,517 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 17 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு 4 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. நிலுவையிலிருந்த 4 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.40,000/– அபராதம் விதிக்கப்பட்டது.

★ அமலாக்க முறைகள் மூலம் மீட்கப்பட்ட 21 குழந்தைகளில், 4 குழந்தைத் தொழிலாளர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்கள், SSA பள்ளிகள் மற்றும் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 17 குழந்தைத் தொழிலாளர்கள் குழந்தைகள் நலக்குழு, அரசு இல்லங்கள் மற்றும் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு, பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

★ மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வுக் கூட்டம் 12.06.2016 அன்று அம்மா அரங்கம், சென்னையில் நடத்தப்பட்டது.

★ தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் 8,346 பயனாளிகளுக்கு ரூ.17,78,480/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது

★ 17 அமைப்புசாரா நல வாரியங்களில் 69,764 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு 99,703 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.40.45 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

★ அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்து 60 வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் 5,337 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

★ அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயில்வதற்காக வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை 28,623 பயனாளிகள் பெற்றுள்ளனர்.

★ சட்டமுறை எடையளவு சட்டம் குறித்தும், நுகர்வோரின் குறைகளை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட கைபேசி செயலி குறித்தும், ஒரு விளம்பர குறும்படம் தயாரித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்

★ அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிக அளவில் நலவாரியங்களில் பதிவு செய்து நலத்திட்ட

உதவிகள் பெறும் வகையில் வாரியத் திட்டங்கள் குறித்து குறும்படம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

★ தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் 7,854 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ 596 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு அவற்றில் தொழிலாளர் நல சட்ட அமலாக்கம் செய்யப்படுகிறது.

சட்டப்படியான நலப்பயன்கள் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தொழிற்சாலைகளுக்கான நடமாடும் கண்காணிப்பு குழு மூலம் 116 திடீர் ஆய்வுகள் நடத்தப்பட்டு பட்டாசுத் தயாரிப்பு பாதுகாப்பாக நடைபெற தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

★ தொழிற்சாலைகளில் விபத்துக்களை தடுக்கவும், தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் 152 தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு 7,187 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

★ கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களில் விபத்து தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த 10 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 542 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

★ 287 கட்டுமான நிறுவனங்கள் புதியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு

★ சிவகாசி பட்டாசு தொழிற்சாலையில் தொடங்கப்பட்ட பயிற்சி மையத்தில் 40 தொழிற்சாலைகளை சேர்ந்த 61 போர்மேன்களுக்கு ஒருமாத கால பயிற்சியும், 28 தொழிற்சாலைகளை சேர்ந்த 682 தொழிலாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

★ நடமாடும் கண்காணிப்பு குழு மற்றும் சிவகாசி பயிற்சி மையம் ஆகியவற்றின் சிறப்பான செயல்பாடுகளால் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்பட்டு, விபத்து பெரும்

எண்ணிக்கையில் குறைந்துள்ளது மட்டும் அல்லாமல், விபத்து நடைபெற்றாலும் அதன் தாக்கம் மற்றும் உயிரிழப்பு வெகுவாக குறைந்துள்ளது.

★ தீபாவளி பண்டிகையை ஒட்டி சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கடந்த இரு வாரங்களில் (11.08.2016 முதல் 22.08.2016 வரை) 73 சிறப்பு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பாக பட்டாசு உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டு தவறு செய்யும் நிறுவனங்களின் மீது 48 காரணம் கோரும் அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

★ ரூ.29.75 இலட்சம் செலவில் பேராபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் வெளியிடப்படும் நஞ்சு மற்றும் நச்சுப்புகை அதிகபட்ச அளவிற்கு மிகாமல் கண்காணித்து தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஒரு கண்காணிப்பு மையம் அமைக்க அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப்பிரிவின் 30 அலுவலர்களுக்கு களப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள ரூ.22.12 இலட்சம் செலவில் மடிக்கணினி வழங்க அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.32 இலட்சம் செலவில் கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.15 இலட்சம் செலவில் கட்டுமான தொழிலாளர்களுக்கு குறும்படங்கள் மற்றும் புகைப்படங்களுடன் கூடிய தகவல் பலகைகள் தயாரித்தல் / வாங்குதல், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் முன்மாதிரி புகைப்படத்துடன் கூடிய காட்சிப்பலகை ஆகியவற்றுடன் கூடிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி வழங்க அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் 60,818 நபர்களுக்கு ரூ.378.57 இலட்சம் 30.06.2016 முடிய உள்ள காலத்திற்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் அரசு அலுவலகங்கள் / நிறுவனங்களுக்கு பதிவுதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டதில் 1,464 நபர்கள் அரசு வேலையில் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

★ மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கும் தனியார் துறை பணியமர்த்தல் உதவிப் பிரிவுகளின் மூலம் 2,464 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

★ ஆன்லைன் வசதியினைப் பயன்படுத்தி துறையின் இணையதளத்தின் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 7,33,602 மாணவர்களும், 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 4,85,968 மாணவர்களும் தாங்கள் பயின்ற பள்ளியில் கல்வித் தகுதியைப் பதிவு செய்துள்ளனர்.

★ இணையதளங்களை பயன்படுத்தி கற்கும் வசதிகளை அதிகப்படுத்தி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெருக்குவதற்கு ஏதுவாக ரூ.2 கோடி செலவில் பயிற்சி மற்றும் பாடங்கள் கற்பிக்க இணைய வழி கற்கும் முறை (Virtual learning system) ஏற்படுத்தப்படும்.

★ கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவ, மாணவிகள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற வசதியாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் கட்டணமில்லா வகுப்புகள் நடத்த ரூ.50 இலட்சம் செலவில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

★ மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களை நாடிவரும் வேலை நாடுநர்களின் தொழில் திறன்களை மதிப்பீடு செய்து அவர்களுக்குரிய பயிற்சி வழங்க ஏதுவாக உரிய தொழில்நுட்ப சாதனங்களுடன் 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ரூ.1.92 கோடி செலவில் திறன் மதிப்பீடு மற்றும் ஆய்வு மையம் ஏற்படுத்தப்படும்.

பயிற்சிப் பிரிவு

★ ஜூலை 2016ஆம் ஆண்டில், தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் நடைமுறை மற்றும் மாவட்ட கலந்தாய்வு முதன் முறையாக துவக்கப்பட்டுள்ளது.

★ ஆகஸ்ட் 2016ஆம் ஆண்டு சேர்க்கையில் எட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிதாக துவங்கப்பட்டுள்ள ஒன்பது தொழிற்பிரிவுகளில் மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர்.

★ மாநில அளவிலான செய்முறை படைப்பாற்றல் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஜூலை 2016இல் 5 தொழிற்பிரிவுகளில் நடத்தப்பட்டு 5 சிறந்த படைப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

★ பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறையினை 22 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.7.70 இலட்சத்தில் அறிமுகப்படுத்துதல்.

★ தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிற் பழகுநர்களை தாங்களே தேர்ந்தெடுப்பதற்கு தொழிற் பழகுநர்களுக்கான முகாம்கள் ஒவ்வொரு வருடமும் ரூ.10 இலட்சம் செலவில் நடத்துதல்.

★ அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெறும் முதல்வர் பணியிடங்களை துணை இயக்குநர் / முதல்வர் பணியிடங்களாக ரூ.2.59 இலட்சம் செலவில் தரம் உயர்த்துதல்.

★ தொழிற்சாலைகளில் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் இளைஞர்களிடையே உள்ள

வரவேற்புக்கேற்ப ஏற்கெனவே உள்ள 8 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகளை ரூ.10.67 கோடி செலவில் தொடங்குதல்.

★ தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் மொழி மற்றும் மென் திறன் பயிற்சியில் சிறந்தவர்களாக விளங்கிட 17 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகம் ரூ. 5.18 கோடி செலவில் அமைத்தல்.

★ அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 26 மாவட்டங்களில் உதவி இயக்குநர் அலுவலகம் ரூ.115.85 இலட்சம் செலவில் உருவாக்குதல்.

★ அரசு தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் / தொழிற் பழகுநர்கள் / பிற மாணவர்களுக்கிடையேயான திறந்த வெளி திறன் போட்டிகளை ரூ.28 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்துல்.

★ இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு திறன் மேம்பாடு கழகம் வாயிலாக 7,386 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது மாநிலம் முழுவதும் பல்வேறு துறைகளில் 3,998 இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

★ அமைப்பு சாரா துறைகளில் திறன் சான்றிதழ் இன்றி பணிபுரியும் 1,00,000 தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில், அவர்களின் முன்அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து திறன் சான்றிதழ் வழங்கும் முன்னோடி திட்டத்தினை ரூ.10 கோடி செலவில் நடைமுறைபடுத்த நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்த அரசு அறிவித்துள்ளது.

★ பணியிடங்களில் விபத்துக்களை பெருமளவு குறைக்கும் பொருட்டு திறன் சான்றிதழ் பெற்ற நபர்களை அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து ஒப்பந்த பணிகளிலும் படிப்படியாக பணியமர்த்தப்படும்.

• • •

உறுதி ஏற்போம்

“நாம் அனைவரும் நம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப உறுதி ஏற்போம்! குழந்தைகள் பணிக்குச் செல்வதைக் கண்டால் அவர்களைத் தடுத்து பள்ளிக்கு அனுப்பி வைப்போம்!”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை

★ கடந்த 100 நாட்களில் 847 நிறுவனங்களுக்கு ரூ.20.52 கோடி முதலீட்டு மானியம், மின்மானியம், மற்றும் மதிப்புக் கூட்டுவரிக்கு ஈடான மானியம், மின்னாக்கி மானியம் ஆகிய மானிய உதவித்திட்டங்கள் மானியமாக வழங்கல்.

★ ரூ.4 கோடி மதிப்பிலான 26 தொழில் மனைகள் 26 தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்குவதற்கு நடவடிக்கை.

★ 18 தொழிற்பேட்டைகளில் உள்ள 120 தொழில் மனைகளுக்கு விற்பனை கிரைய பத்திரம் வழங்கல்.

★ தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம் பிடாநேரி தொழிற்பேட்டையில் 108.23 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்காக மத்திய அரசின் குழும வள திட்டத்தின் கீழ், ரூ.805 இலட்சம் திட்ட மதிப்பிற்கு மத்திய அரசிடம் இருந்து இறுதி ஒப்புதல் பெறப்பட்டு முதல் கட்டமாக ரூ.89.74 இலட்சம் மதிப்பீட்டில் 26 தொழில் மனைகள் உருவாக்கம்.

★ ரூ.40.36 கோடி திட்ட மதிப்பில், ரூ.10.09 கோடி மானியத்துடன் கூடிய 93 விண்ணப்பங்களுக்கு நிதி நிறுவனங்களால் தற்காலிக ஒப்புதல் வழங்கல்.

★ இதில் ரூ.15.88 கோடி திட்ட மதிப்பில், ரூ.3.97 கோடி மானிய மதிப்பிலான 30 மகளிர் தொழில் முனைவோர்களின் திட்டங்களும் அடங்கும்.

★ தமிழ்நாடு அரசானது ரூ.3,010.59 இலட்சம் தனிநபர் மானியமாகவும், ரூ.186.01 இலட்சம் 3 விழுக்காடு பின் முனை வட்டி மானியமாக தொழில் முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கல்.

★ வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (2016–2017) 886 பயனாளிகளுக்கு ரூ.575.71 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன்.

★ பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 2016–2017ஆம் ஆண்டில் 420 பயனாளிகளுக்கு ரூ.946.31 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கல்.

• • •

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நகராட்சி நிருவாக ஆணையரகம்

★ தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சாலைகளை மேம்படுத்த ரூ.101.93 கோடி ஒதுக்கீடு.

★ உட்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.75.48 கோடியும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.31.83 கோடியும் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை.

★ அம்ருத் திட்டத்தின் கீழ் 1 மாநகராட்சி மற்றும் 4 நகராட்சிகளில் ரூ.1,056.97 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகளும், 4 மாநகராட்சிகள் மற்றும் 2 நகராட்சிகளில் ரூ.1,491.70 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளும் மற்றும் 24 நகராட்சிகளில் ரூ.66 கோடி மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டு பணிகளும் மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை.

★ சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி உதவியுடன் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் 1 மாநகராட்சி மற்றும் 36 நகராட்சிகளில் ரூ.116.16 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை.

★ தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 1,25,352 தனி குடியிருப்பு கழிவறைகள் கட்ட நடவடிக்கை.

★ தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2,184 இருக்கைகளுடன் சமுதாயக் கழிவறைகள் கட்ட நடவடிக்கை.

பேரூராட்சிகள் இயக்ககம்

★ சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 104 பேரூராட்சிகளில் ரூ.53.75 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கை.

★ தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 153 பேரூராட்சிகளில் 172 சாலைப்பணிகள் 284.755 கி.மீ நீளத்திற்கு ரூ.139 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கை.

★ 2015–2016ஆம் ஆண்டிற்கான சிறந்த மூன்று பேரூராட்சிகளுக்கான விருது முறையே வேலூர், சின்னசேலம் மற்றும்

பெரியநாயக்கன்பாளையம் ஆகிய 3 பேரூராட்சிகளுக்கு வழங்கல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

- ★ ரூ.48.67 கோடி மதிப்பீட்டில், திருச்சி மாவட்டம், 212 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ★ ரூ.15.47 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர் மாவட்டம், ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் 63 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ★ ரூ.9.19 கோடி மதிப்பீட்டில், தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி மற்றும் 30 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம்.
- ★ ரூ.6.43 கோடி மதிப்பீட்டில், கரூர் மாவட்டம், 40 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ★ ரூ.11.72 கோடி மதிப்பீட்டில், ஈரோடு மாவட்டம், காரப்பாடி மற்றும் 88 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ★ திருவத்திபுரம் நகராட்சி, பெரியகுளம் நகராட்சி மற்றும் கல்லக்குடி பேரூராட்சிக்கான 3 குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ரூ.29.68 கோடி மதிப்பீட்டில் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றம்.
- ★ பெரம்பலூர் நகராட்சியில் விடுபட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய 2 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.46.82 கோடி மதிப்பீட்டில் 0.72 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றம்.
- ★ 28.06.2016 அன்று தமிழ்நாடு முழுவதும் 31 மாவட்ட பேரணிகளும், 29.06.2016 அன்று 385 ஒன்றிய பேரணிகளும், 30.06.2016 அன்று 6,262 ஊராட்சி அளவிலான விழிப்புணர்வு கூட்டமும் நடைபெற்றன.
- ★ தமிழகத்தில் அனைத்து மக்களும் தாங்கள் பருகும் குடிநீரின் தரத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் அறியும் பொருட்டு, 01.07.2016 முதல் 03.07.2016 வரை அனைத்து

நீராதாரங்களின் நீர் மாதிரிகளை சேகரித்து, பரிசோதனை செய்து, 3,06,419 நீர் மாதிரிகள் இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த விழிப்புணர்வு முகாம், நீரின் தரம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

★ 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம்.

★ நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தை நெம்மேலியில் ரூ.1,371.86 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு ஜெர்மானிய மேம்பாட்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரில் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு பழைமையான குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும், ரூ.116.04 கோடி மதிப்பீட்டில் அமைக்க ஆணை.

பேருந்து சாலைகள் துறை

பெருநகர சென்னை மாநகராட்சி

★ பெருநகர சென்னை மாநகராட்சியில் மேம்பால சந்திப்புகளை மேம்படுத்தி பொதுமக்களின் வசதிக்காகவும், சென்னை நகரின் அழகை மேம்படுத்தும் நோக்கில் டி.டி.கே. சாலை மற்றும் கத்தீட்ரல் சாலை சந்திப்பை ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

★ சென்னை நகரின் முக்கிய சுற்றுலா தலமான மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தை ரூ.2.76 கோடியில் மேம்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது.

கட்டடத்துறை

★ ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் 3 எரிவாயு எரியூட்டகம், ரூ.1 கோடி மதிப்பீட்டில் 2 வார்டு அலுவலகம், ரூ.2.58 கோடி மதிப்பீட்டில் 6 இரவு காப்பகங்கள் ஆகிய பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால் துறை

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு ரூ.1,101.43 கோடி மதிப்பிலான 1,147 எண்ணிக்கையில் 270 கி.மீ. நீளத்திற்கு தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் இந்த ஆட்சி அமைந்த 100 நாட்களில் 278 எண்ணிக்கையில் 44 கி.மீ. நீளத்திற்கு ரூ.97.10 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ கடந்த மழை காலத்தில் மழைநீர் தேக்கம் கண்டறியப்பட்ட பகுதிகளில் ரூ.91.71 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகிறது.

★ பருவமழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ரூ.18 கோடி மதிப்பில் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி மண்டலங்கள் மூலம் நடைபெற்று வருகிறது.

★ கொசு உற்பத்தியினை தடுக்கும் பொருட்டு ஆகாயத் தாமரை மற்றும் மிதக்கும் கழிவுப்பொருட்களை அகற்றி கால்வாய்களை சுத்தப்படுத்திட ரூ.24.05 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

ஆர்.கே. நகர் தொகுதி:

★ ஆர்.கே. நகர் தொகுதியில் மழைநீர் தேங்கா வண்ணம் இளையா தெரு முதல் வடக்கு

டர்மினல் சாலை வரை காமராஜர் சாலை, A.E. கோயில் தெரு வழியாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.4.31 கோடி மதிப்பீட்டில் 1.67 நீளத்திற்கு நடைபெற்று வருகிறது.

★ இளையா தெரு மற்றும் காமராஜர் சாலை ஆகிய தெருக்கள் மிகவும் தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைநீர் வடிகால் மூலம் A.E. கோயில் தெருவில் அமைக்கப்பட்டு வரும் கீழ் நிலை தொட்டியில் மழை நீரை சேமித்து அங்கிருந்து நீர் மூழ்கி உயர் அழுத்த பம்புகள் மூலம் T.H. ரோட்டில் அமைக்கப்பட உள்ள மழைநீர் வடிகால் மூலம் வெளியேற்ற திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ ஆர்.கே. நகர் தொகுதியில் உள்ள நீர்வழி கால்வாய்கள் கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் இணைப்பு கால்வாய்களுக்கு வெள்ள தடுப்புச்சுவர் 2.52 கி.மீ. நீளத்திற்கு ரூ.27.87 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

மின் துறை

★ மண்டலம்–9, வார்டு 125, 126ல் லூப் சாலையில் 103 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் 90–120 வாட்ஸ் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டு உத்திரவாதத்துடன் ரூ.76.89 இலட்சம் வழங்கி, நிறுவி சோதித்து இயக்கி வைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

★ மண்டலம் 3, 4, 5, 6, 10 மற்றும் 13இல் உபயோகத்தில் உள்ள தெரு மின் விளக்கு பிட்டிங்களுக்கு பதிலாக மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெரு மின் விளக்கு பிட்டிங்களாக மாற்றி அமைக்க ரூ.26.63 கோடி மதிப்பில் 26,975 எண்ணிக்கை எல்.இ.டி. பிட்டிங்கள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

★ மெரினா கடற்கரையில் ரூ.32.88 இலட்சம் மதிப்பில், 3 எண்ணிக்கை 30 மீ. உயரமுள்ள உயர் கோபுர கம்பம் வழங்கி, நிறுவி, இயக்கும் பணி முடிவடைந்தது.

இயந்திர பொறியியல் துறை

★ சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட நீர்வழித்தடங்களில் உள்ள ஆகாயத்தாமரைகள் மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றி கொசு உற்பத்தியை தடுத்து தடையில்லா நீர் ஓட்டத்தினை ஏற்படுத்தும் வகையில் நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய ஆம்பிபியன் உபகரணம் ரூ.9.97 கோடி முதலீட்டில் கொள்முதல்.

★ 3.5 மீட்டருக்கு குறைவான அகலம் கொண்ட கால்வாய்களில் தேங்கியுள்ள குப்பை / மற்றும் மிதக்கும் கழிவுகளை அகற்றி சீரான நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு ஒழிப்பு மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் விதமாக 3 Robotic Multi Purpose Excavator–கள் ரூ.19.65 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய ஆணை.

திடக்கழிவு மேலாண்மை துறை

இரவு நேரத்தில் துப்புரவு பணி மேப்படுத்துதல்

★ மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் இத்துறையினால் தீவிர இரவு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ இரவு நேர துப்புரவு பணிக்கு 1,741 துப்புரவு பணியாளர்கள், 423 மூன்று சக்கர வாகனங்கள், 10 இலகுரக காம்பாக்டர்கள், 80 கனரக காம்பாக்டர்கள் மற்றும் 12 இயந்திர பெருக்கிகள் பயன்படுத்தப்பட்டு தினசரி, 1,055 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்படுகின்றன. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு ஒளிரும் மேலாடைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஒவ்வொரு வட்டார அலுவலக எல்லைக்குட்பட்ட தலா 5 மண்டலங்களுக்கும் 6 செயற்பொறியாளர்கள் வீதம் இரவு துப்புரவு பணியை கண்காணித்து நடைபெறும் வேலைகளை உடனுக்குடன் புகைப்படம் எடுத்து அனுப்பியும் அறிக்கை அளித்தும், செவ்வனே துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துப்புரவு பணிக்கு தேவையான தளவாடங்கள் வாங்குதல்

★ மூன்று சக்கர வண்டியில் வைக்கப்படும் 15,000 குப்பை தொட்டிகள் (80 லிட்டர் கொள்ளளவு) ரூ.159 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்ய ஆணை.

★ 500 மூன்று சக்கர மிதிவண்டிகள் ரூ.90 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்ய ஆணை.

★ 2,000 ரோட்டோ மேக் பின்கள் (90 லிட்டர் கொள்ளளவு) ரூ.43.40 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்ய ஆணை.

★ 1,100 லிட்டர் கொள்ளளவுடைய காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 1,484 எண்ணிக்கை ரூ.298 இலட்சம் மதிப்பில் மற்றும் 660 லிட்டர் – 200 எண்ணிக்கை ரூ.33.50 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்ய ஆணை.

பொதுசுகாதாரத்துறை

அம்மா உணவகம்

★ பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள கோட்டங்களில் 293 அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும், மொத்தம் 300 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

★ 107 அம்மா உணவகங்கள் அக்டோபர் 2016க்குள் திறக்கப்பட உள்ளன.

மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் இயங்கும் பல்வேறு மருத்துவமனைகளின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் விவரம்

- புற நோயாளிகளின் எண்ணிக்கை : 13,02,757
- 2,973 குழந்தைகளுக்கு காசநோய் தடுப்பூசிப்போடப்பட்டது.
- 13,433 குழந்தைகளுக்கு பெண்டா தடுப்பூசி போடப்பட்டது.
- 15,529 குழந்தைகளுக்கு தட்டம்மை நோய் தடுப்பூசிப் போடப்பட்டது.
- 15,529 ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான தடுப்பூசிகள்.
- 40,519 தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை.
- 9,766 தாய்மார்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை.
- 1,683 தாய்மார்களுக்கு சுகப்பிரசவம்.
- 1,431 தாய்மார்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் பிரசவம்.
- 2,185 தாய்மார்களுக்கு பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை.
- 4 ஆண்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை.

சிறப்பு மக்கள் நலத்திட்டங்கள்

★ ஏழைப் பெண்களுக்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 151 பயனாளிகளுக்கு ரூ.50.50 இலட்சம் மற்றும் 604 கிராம் தங்கம் வழங்கல்.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 13,838 பயனாளிகளுக்கு ரூ.12.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ ஜனனி சுரக்ஷா யோஜனா நிதியுதவி திட்டத்தின் கீழ் 3,035 பயனாளிகளுக்கு ரூ.18.21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ 2,538 பிறந்த குழந்தைகளுக்கு அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரங்கத்துறை

★ முதற்கட்டமாக சென்னை, வியாசர்பாடி முல்லை நகரில் உள்ள கால்பந்து விளையாட்டு மைதானத்தில் செயற்கை புல் தரை (Outdoor Tara flex) மற்றும் மின்னொளி விளக்குகள் (Flood Lights) பொருத்தப்பட்டு சென்னை மாநகராட்சியில் முதன் முறையாக உலகளவிற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் விளையாட்டு வீரர்கள் நல்ல முறையில் உலக தரத்திற்கு பயிற்சி பெற்று வருகின்றனர்.

★ சென்னை சாமந்திபூ காலனியில் உள்ள கால்பந்து விளையாட்டுத்திடல் இயற்கை புல்தரையிலான கால்பந்து மைதானமாக உருவாக்கப்பட்டு, மின்னொளி விளக்குகள் (Flood Lights) பொருத்தப்பட்டு சென்னை மாநகராட்சியில் முதன் முறையாக உலகளவிற்கு தரம் உயர்த்தம். விளையாட்டு வீரர்கள் நல்ல முறையில் உலக அளவிற்கு பயிற்சி பெற்று வருகின்றனர்.

★ பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கடந்த ஆண்டு வரை 165 பள்ளிகளில் மழலையர் பள்ளிகள் செயல்பாட்டில் இருந்தது, இந்த கல்வியாண்டில் (2016–2017) மேலும் 35 பள்ளிகளில் மழலையர் பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டு மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளது.

★ படித்த ஏழை, எளிய பட்டதாரி இளைஞர்கள், மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு கருதி பல துறைகளைச் சார்ந்த கல்வியையும் UPSC (IAS, IPS) போன்ற படிப்புகள் மற்றும் உயர் கல்விக்கான போட்டித் தேர்வுகள் எழுதிடவும் அவர்களின் தேவைக்கேற்ப இப்பயிற்சியானது கடந்த 3 ஆண்டுகளாக கல்வித்துறையின் மூலமாக சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து இத்திட்டத்தினை இக்கல்வியாண்டிலும் (2016–2017) தொடர்ந்து செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு இப்பயிற்சிக்கான தொடக்க வகுப்பு செனாய் நகர், அம்மா அரங்கில் 19.08.2016 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 1,200 மாணவர்கள் பங்கு பெற்றனர்.

★ உலகின் இரண்டாவது நீளமான மெரினா கடற்கரைக்கு வரும் பொதுமக்களுக்கு நிழல் தரக்கூடிய வகையில் நன்கு வளர்ந்த 25 அடி முதல் 30 அடி உயரமுள்ள மரங்கள் ரூ.17.85 இலட்சம் மதிப்பீட்டில் 210 மரங்கள் வேறு ஒரு இடத்திலிருந்து வேருடன் பெயர்த்தெடுத்து நடவு செய்யப்பட்டு வருகிறது.

★ பூங்காக்களுக்கு இதுவரை அப்பூங்காவில் கிடைக்கும் நிலத்தடி நீரினை வீணாக்காமல் அப்பூங்காவில் உள்ள கழிவு நீரினை சுத்தப்படுத்தி அதனை பூங்காவிற்கு பயன்படுத்த, முதற்கட்டமாக, ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் மண்டலம்–6, மூலிகை பூங்காவிலும் மற்றும் மண்டலம்–8இல் போகன்வில்லா பூங்காவில் மற்றும் ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை முன்பு அமைக்கப்பட்டு வரும் பூங்காவில் இச்சாதனங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

• • •

நீர்வளம் பெருக்குவோம்

“மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுத்து முறையாகச் சேமித்து, பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும், குடிநீர் ஆதாரமும் பெருகும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

★ பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தின் மூலம் 19ஆவது அணிக்கான ‘இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான 41 நாட்கள் சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி,’ 525 அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ 20ஆவது அணிக்கான ‘இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான 41 நாட்கள் சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி,’ 523 அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

★ 9 அணிகளில் ‘வருவாய் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கான 2 நாட்கள் பேரிடர் மேலாண்மை பயிற்சி,’ 385 அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பல்வேறு துறைகளில் உள்ள 2,983 காலிப் பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகளை வெளியிட்டுள்ளது. ●

திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை

சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

★ சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் வழித்தடம்–1ஐ வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரை நீட்டிக்கும் திட்டத்திற்கு 15.06.2016 அன்று மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது. அந்த நீட்டிப்புத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.07.2016 அன்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்கள். ●

அனைத்து வகையிலும் முன்னேற்றம்

“தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூக பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

பொதுத்துறை

★ இத்தாலி நாட்டிற்கு வேலை காரணமாக சென்று அங்கு சிறை பிடிக்கப்பட்டிருந்த திரு. கண்ணன் என்பவர் இத்தாலியில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் மீட்கப்பட்டு அவரது சொந்த ஊரான புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

★ துபாய் நாட்டிற்கு மீன் பிடிக்கச் சென்று, சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு, 12.07.2016 அன்று 11 பேரும் 14.07.2016 அன்று 12 பேரும் இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

★ சவுதி அரேபியாவிற்கு வேலைக்கு சென்று அங்கு அவரது முதலாளியால் துன்புறுத்தப்பட்ட திருமதி தாட்சாயனி என்பவர் அங்கிருந்து தப்பிக்க முயன்ற போது அவரது முதுகெலும்பில் ஏற்பட்ட விபத்து காரணமாக பாதிக்கப்பட்டதால், அவரது வாழ்வாதாரத்திற்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டு, அந்த தொகை தமிழ்நாடு பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷனில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையான ரூ.8,125/–ஐ அவரது வாழ்நாள்

வரை, அவரது வங்கிக் கணக்கில் வரவு வைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ நேபாளம் வழியாக முக்திநாத் ஆலயத்திற்கு புனித யாத்திரை சென்றிருந்த காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 நபர்கள் அங்கு ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டதால், தமிழக அரசு நேபாளில் உள்ள இந்திய தூதரகத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மேற்கண்ட நபர்களை ஹெலிகாப்டர் மூலம் காப்பாற்றி இந்தியாவிற்கு அழைத்து வர கட்டணத்தொகை ரூ.2.10 இலட்சம் மற்றும் டில்லியிலிருந்து சென்னை அழைத்து வர இரயில் கட்டணம் வழங்கவும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

★ சவுதி அரேபியாவில் வேலையிழந்த ஒன்பது (9) நபர்கள் முறையே 11.08.2016 (1), 20.08.2016 (5), 22.08.2016 (1) மற்றும் 26.08.2016 (2) அன்று சென்னை அழைத்து வரப்பட்டு அவர்களின் சொந்த மாவட்டங்களான அரியலூர், திருநெல்வேலி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

★ கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மூன்று வெளிநாடு வாழ் தமிழர்களின் சார்பாக கத்தார் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து அவர்களின் சட்ட உரிமையை நிலைநாட்டவும், உண்மையான விசாரணை மேற்கொள்ளவும், மனிதாபிமான அடிப்படையில் ரூ.9.50 இலட்சம் (50,000 கத்தார் ரியாலுக்கு நிகராக) இவ்வரசு வழங்கியுள்ளது.

★ வெளி நாடுகளுக்குச் சென்று அங்கு மருத்துவ ரீதியாக பாதிக்கப்பட்ட தமிழர்கள் அங்குள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் இந்தியா அழைத்து வரப்பட்டு, அவர்களது விருப்பத்திற்கேற்ப மருத்துவமனைக்கோ அல்லது சொந்த ஊர்களுக்கோ 108 ஆம்புலன்ஸ் சர்வீஸ் மூலம் அனுப்பிட பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

★ வெளி நாடுகளுக்குச் சென்று அங்கு இறந்த தமிழர்களின் உடல்கள் அனைத்தையும் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டது.

★ 2015–2016ஆம் ஆண்டிற்கான அகில இந்திய அளவில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, கொடிநாள் நிதிக்கு அதிக அளவு வசூல் செய்தமைக்கு முதலிடம் பெறும் மாநிலத்திற்கு வழங்கப்படும் சுழற் கோப்பையை தமிழ்நாடு பெற்றுள்ளது.

★ 23.05.2016 முதல் இன்றுவரை (29.08.2016) முன்னாள் படைவீரர்களுக்கு மாநில அரசு துறைகளில் 35 நபர்களுக்கும், மத்திய அரசுத் துறைகளில் 8 நபர்களுக்கும் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 14 நபர்களுக்கும் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ போர் மற்றும் போரை ஒத்த நடவடிக்கைகளில் இறந்த படைவீரர்களின் வாரிசுதாரருக்கு மற்றும் ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர் 9 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

★ முன்னாள் படைவீரர் நலத்துறையில் பணியாற்றி பணியின்போது இறந்த அரசு பணியாளர்களின் 2 வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர் நீத்த துணை இராணுவப் படைப்பிரிவினை (CRPF) சார்ந்த வாரிசுதாரர்கள் 2 நபர்களுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.20 இலட்சம் கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ 57 முன்னாள் படைவீரர்களுக்கு அவர்களது செயல் திறன் மேம்படும் வகையில் ஓட்டுநர் மற்றும் கைபேசி பழுதுபார்த்தல் போன்றவற்றில் 23.05.2016 முதல் 30.08.2016 முடிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் 8,794 முன்னாள் படைவீரர்கள் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 23.05.2016 முதல் 30.08.2016 முடிய 174 முன்னாள் படைவீரர்கள் கூடுதலாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 15.08.2016 சுதந்திர தினத்தன்று ஆற்றிய உரையின் போது விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.11,000/– லிருந்து ரூ.12,000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.5,500/– லிருந்து ரூ.6,000/– ஆகவும் மற்றும் சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.5,000/– லிருந்து ரூ.6,000/– ஆகவும் உயர்த்தி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னுரிமை

“தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். அதே நேரத்தில், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அதாவது inclusive growth அமையும் வண்ணம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

• • •

பொதுப்பணித்துறை

பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம்

★ 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு

★ 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் பாசன கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் பயன்பாட்டிலுள்ள பாசன கட்டுமானங்களை புனரமைக்கும் பணிகளுக்கும் ரூ.1,898.82 கோடி நிதி ஒதுக்கீடு. நடப்பாண்டில் (2016–2017) மே 2016 முதல் ஜுலை 2016 வரை ரூ.236.56 கோடி செலவு.

நபார்டு நிதியுதவித் திட்டங்கள்

★ புனரமைத்தல், மற்றும் வெள்ள தடுப்பு பணிக்காக ரூ.140 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ள உத்தேசம்.

★ இதற்காக திருத்தப்பட்ட வரவு செலவு திட்டம் 2016–2017இல் ரூ.60 கோடிக்கு ஒப்புதல்.

★ பயனீட்டாளர்களை ஈடுபடுத்தி குடிமராமத்து முறையை புதுப்பிப்பதலை மேற்கொள்ள அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத்துறையின் கட்டுபாட்டிலுள்ள சிறு பாசன ஏரிகளை பராமரிக்க உத்தேசம். இதற்கு, முதல் முறையாக, திருத்தப்பட்ட வரவு செலவு திட்டம் 2016–2017ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கீடு.

★ ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) கடனுதவியுடன் காவேரி கழிமுகப்பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டம்.

★ இத்திட்டத்திற்கான திட்ட ஒப்பந்தம் மற்றும் கடன் ஒப்பந்தம் 14.07.2016 அன்று ஆசிய வளர்ச்சி வங்கியுடன் கையொப்பம். 6 ஆறுகள் மற்றும் வடிகால்களை மேம்படுத்தி,

மறுகட்டுமானம் மற்றும் புனரமைத்தல் பணிகளுடன் பல்வேறு நீரேற்று இயந்திர பணிகள் ரூ.960.66 கோடி. வெள்ளையாறு மற்றும் பாண்டவையாறு ஆகிய இரு ஆறுகளில் ரூ.278.97 கோடி மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றம்.

விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் கீழ் காவேரி வடிநில அமைப்புகளை நவீனப்படுத்தும் திட்டம் (AIBP)

★ ரூ.11,420 கோடி மதிப்பீட்டில், திட்ட முதனிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல். விரிவான திட்ட அறிக்கை, ரூ.2,298.75 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின், மத்திய நீர்க் குழுமத்தின் ஒப்புதல்.

• • •

வருவாய்த்துறை

★ 'அம்மா திட்டம்' வாரந்தோறும் அனைத்து வருவாய் வட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

★ ஒவ்வொரு வட்டத்திலும், ஒரு கிராமத்தினை தேர்வு செய்து, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் "அம்மா திட்ட முகாம்கள்" நடத்தப்படுகின்றன .

★ அம்மா திட்ட முகாம்களில் கடந்த நூறு நாட்களில் 2,42,043 மனுக்கள் பெறப்பட்டு 1,99,209 மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளதுடன் தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

★ சமூக பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டங்களின் கீழ் 47,830 சமுதாயத்தில் நலிவுற்ற ஆதரவற்ற பயனாளிகளுக்கு புதிதாக மாதாந்திர ஒய்வூதியம் ரூ.1,000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் சென்னையில் மட்டும் 2,918 ஆதரவற்றவர்களுக்கு ஒய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசு ரூ.1,481.80 கோடி மதிப்பீட்டில் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடலோர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பேரிடர் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்ய வேண்டிய முதலுதவி பயிற்சி மற்றும் நீச்சல் பயிற்சி, கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பயிற்சி, பேரிடர் ஒத்திகை நடத்துதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

★ இத்திட்டத்தின் கீழ் கடந்த 100 நாட்களில் கடலோர கிராமங்களில் 182 பயிற்சி வகுப்புகள் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்டு 9,714 பொதுமக்கள் பயன்பெற்றுள்ளனர். அவ்வாறே கடலோர கிராமங்களில் உள்ள 15 பள்ளிகளில் 500

மாணவர்களுக்கு பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

★ பட்டா மாறுதல் கோரும் மனுக்கள் கிராம நிர்வாக அலுவலரால் பெறப்பட்டு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது.

★ உட்பிரிவு இல்லாத இனங்களில் 15 நாட்களிலும், உட்பிரிவு உள்ள இனங்களில் 30 நாட்களிலும் பட்டா மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும்.

★ இணையதளம் மூலமாகப் பெறப்படுகின்ற பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்களை முடிவு செய்து பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்படும். இதுவரை 23.05.2016 முதல் 22.08.2016 வரை, 2,46,691 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருந்து அதில் நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெறுவர்.

★ இத்திட்டத்தின் கீழ், கல்வி, திருமணம், இயற்கை மரணம், ஈமச்சடங்கு செலவு, விபத்து நிவாரணம் முதலிய உதவித் தொகையும், காசநோய், புற்று நோய், எச் ஐ வி / எய்ட்ஸ், இடைச் சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis), கை கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, நரம்பு சம்பந்தப்பட்ட நோய், முதுகு தண்டுவடம் பாதிப்பு, பார்வை இழத்தல், இதய நோய், மனநிலை பாதிப்பு, கல்லீரல் நோய், சிறுநீரக நோய், அரிவாள்செல் இரத்தசோகை (Sickle Cell Anemia), இரத்த அளிவு சோகை (Thalassemia), இரத்த உறையா நோய் (Haemopilia) முதலிய கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்ட விவசாய உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித் தொகையும் மற்றும் எச்ஐவி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதாந்திர மானியமும் வழங்கப்படுகின்றன. முதியோர் ஒய்வூதியம் வருவாய் நிர்வாகத்துறை மூலம் வழங்கப்படுகிறது. விவசாய உறுப்பினர்கள் இறந்துவிட்டாலும், அவர்களது குழந்தைகள் தொடர்ந்து பயன்.

★ 1,59,58,265 நபர்கள் உறுப்பினர்களாகவும் 1,17,49,934 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்த உறுப்பினர்களாகவும் மொத்தம் 2,77,08,199 பேர் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் ரூ.115.21 கோடி 1,69,115 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நிலஉடைமைதாரர்கள் (கோயில் நிலங்கள்) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 6 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்பட்டன. நிலுவையில் இருந்த 7,523 வழக்குகளில் 01.06.2016 முதல் 31.07.2016 வரை 1,011 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ ரூ.1.10 கோடி மதீப்பிட்டில் மாநிலத்தில் 154 வட்ட அலுவலகங்களில் நில ஆவண மேலாண்மை மையங்களை நிறுவிட எடுக்கப்பட்ட முயற்சிகளின் ஒரு பகுதியாக கடந்த 100 நாட்களில் மட்டும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 11 நில ஆவண மேலாண்மை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ மாநிலம் முழுவதும் தற்போது நடைபெற்று வரும் நவீன நில அளவை பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள சி.ஸ்டார் பயிற்சி நிலையத்தில் 50 நிலஅளவர் மற்றும் வரைவாளர்களுக்கு நவீன நில அளவை பயிற்சி கடந்த 100 நாட்களில் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர 10 இந்திய ஆட்சி பணி அலுவலர்கள் உள்ளிட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை, வருவாய் துறை, பத்திரப்பதிவு துறை, தமிழ்நாடு தலைமைச் செயலக பல்வேறு துறை சார்ந்த 730 அலுவலர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம்

ஒரத்தநாடு நிலஅளவை பயிற்சி நிலையத்தில் நிலஅளவை சார்ந்த அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

★ நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை சார்பாக கடந்த 100 நாட்களில் 310 நத்தம் பட்டாக்களும், 27,397 நகர பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ மாநிலத்தில் கூட்டுப்பட்டாக்களைத் தனிப்பட்டாவாக மாற்றும் திட்டம் காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, 21,339 கூட்டுப் பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

★ கூடுதலாக 28 வருவாய் வட்டங்கள் இணையவழிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் 2,40,144 இணையவழி பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து 3.76 இலட்சம் நகர நில ஆவணங்களும், கணினிமயப்படுத்தப்பட்டு நகர நில ஆவணங்களுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் மூலம் சென்னை மாவட்டத்தின் 7 வட்டங்களில் இணையவழி பட்டா மாறுதல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சென்னையிலுள்ள பொதுமக்களுக்கு தற்போது இணையவழியில் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

★ அனைத்து நில ஆவணங்களையும் கணினிப்படுத்தி இணையவழி பட்டாமாறுதலை தமிழகம் முழுவதும் 267 வட்டங்களில் நடைமுறைப்படுத்தியமைக்காக, நில அளவை மற்றும் நிலவரித்திட்டத்துறைக்கு, “நல் ஆளுமை விருதும்” ரூ.2 இலட்சத்திற்கான ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டது.

★ நவீன நிலஅளவைப் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு ஏதுவாக மாநிலத்தில் 540 குறுவட்டங்களின் நிலஅளவர்களுக்கு 540 மடிக்கணினிகள் ரூ.1.34 கோடி செலவில் வழங்கப்பட்டு, இணைய வழி பட்டா மாறுதல் தொடர்பான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பாதுகாப்பு

“இந்த அரசு நாட்டின் வளர்ச்சியை, மக்களின் வளர்ச்சியை, குறிப்பாக ஏழை, எளிய மக்களின் வளர்ச்சியை, அவர்களின் பாதுகாப்பினைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற அரசு.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ இணையவழி பட்டா மாறுதல்களை தீவிரமாகக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஏதுவாக இத்துறையின் 50 உயர் அலுவலர்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில், 3G தரவு அட்டைகளுடன் கூடிய 50 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 1.50 இலட்சம் புலப்படங்கள் வெளி ஆதார முறை மூலம் கணினிமயமாக்கப்பட்டு, அதற்குரிய ஊதியமாக ரூ.2.10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கிராம வரைபடங்களும், ஏற்கனவே கணினிப்படுத்தப்பட்டு ஒளிபிம்ப நகல் (Scan) எடுத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவ்வரைபடங்களை கணினி மூலம் தமிழில் வரைவு செய்யும் பணி (Digitization) தற்போது முடிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் தமிழில் வரைவு செய்யப்பட்டுள்ள கிராம வரைபடங்களைப் பெற்று தங்களுடைய நிலம் சம்பந்தமான விவரங்களை எளிதில் தெரிந்து கொள்ள இயலும்.

• • •

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

I– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

★ ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோருக்கு ரூ.420 கோடி செலவில் முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் 20,000 வீடுகள் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படவுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) – சிறப்புத் திட்டம் (வெள்ளநிவாரணம்)

★ பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) – சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்)–ன் கீழ் ரூ.1.70 இலட்சம் அலகுத் தொகையில் 45,788 வீடுகள் ரூ.778.396 கோடி மொத்த மதிப்பீட்டில் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.591.215 கோடி ஆகும்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)–2016–2017

★ பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ரூ.1.70 இலட்சம் அலகுத் தொகையில் 1,31,831 வீடுகள் கட்டுவதற்கு ரூ.2,241.127 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.1,317.255 கோடி ஆகும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்
பகுதி X 2016–2017

★ பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி Xன் கீழ், 1366.797 கி.மீ. நீளமுள்ள, 583 சாலைப்பணிகள் மற்றும் 22 பாலங்கள் மேற்கொள்ள 758.44 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் இதில் மாநில அரசின் பங்குத்தொகை 341.11 கோடி ரூபாய் ஆகும்.

நபார்டு 2016–2017

★ வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், 51 பாலங்கள் 60.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

II– தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

★ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் 1,249.66 கோடி ரூபாய் 43,530 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கல்.

★ 1,204 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக 2.94 இலட்சம் ரூபாய் விடுவிப்பு.

★ தமிழ்நாடுமாநிலஊரகவாழ்வாதாரஇயக்கத்தின் கீழ், 21 மாவட்டங்களில் 95 வட்டாரங்களிலுள்ள 2,451 ஊராட்சிகளில் 930 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, மொத்தமாக 2,460 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைப்பு.

★ ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் 3,021 நபர்களுக்கு பயிற்சி.

III –புதுவாழ்வு திட்டம்

1. இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி:

★ 3,588 இளைஞர்களை கண்டறிந்து அவர்களுக்கு பல்வேறு தொழில் திறன் பயிற்சிகள்.

2. ஒத்த தொழில் குழுக்கள்:

★ வேலூர் மாவட்டத்தில் ரூ.14.26 இலட்சம் செலவில் புதுவாழ்வு திட்டத்தில் ஒரு கால்நடை தீவனத் தயாரிப்பு ஆலை.

★ நடப்பு 100 நாள் காலத்தில் ரூ.2.5 இலட்சம் செலவில் தீவன உட்கொள்ளும் கலவை இயந்திரம், ஒரு இணைப்பாக ஏற்படுத்த நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த கூடுதல் உபகரணம் இங்கு பணியாற்றும் மகளிரின் வேலைப்பளுவை வெகுவாக குறைக்கும்.

3. வங்கி இணைப்பு:

★ 6,819 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 198.63 கோடி ரூபாய் வங்கிகளின் மூலம் கடன்.

4. மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்:

★ 74 மன நலக்குறைபாடு உடையவர்கள் மன நல மருந்துகள் பெற்றுள்ளனர். 20 நபர்களுக்கு உள்நோயாளி சிகிச்சை சேவை வழங்கல்.

★ 446 மன நல இயலாமையில் உள்ளவர்களுக்கு ரூ.36,82,500 அளவில் தனிநபர் கடன் வழங்கல்.

★ 210 மாற்றுத் திறனாளிகள் மற்றும் 160 நலிவுற்றோருக்கு ரூ.54,57,500 அளவில் தனிநபர் கடன் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வழங்கல்.

★ ஒன்றுக்கும் மேம்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIEPMD) மூலம் 300 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கல்.

5. சமூக வல்லுநர்களுக்கான பயிற்சி:

★ தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக வல்லுநர்களுக்கு கணக்கு மற்றும் பதிவியல் மூன்று நாள் பயிற்சி 180 சமூக வல்லுநர்களுக்கு கிராம வறுமை

ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகிய சமூக அமைப்புகளுக்கு பதிவியல் செய்திட பயிற்சி அளிப்பு.

★ வாழ்வாதாரம் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் தொழில் திட்டம் தயாரித்தல் பற்றிய 6 நாட்கள் பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட 612 சமூக வல்லுநர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

6. கிராம கற்றல் மையம்:

★ கிராம பஞ்சாயத்துகளில் செயல்பட்டு வரும் 4,174 கிராம கற்றல் மையத்தில் 2,10,685 மின் ஆளுமை பரிவர்த்தனைகள் மற்றும் 13,463 மின் வணிக பரிவர்த்தனைகள் மேற்கொள்ளல்.

★ கிராம கற்றல் மையங்களை மின் கட்டணம் செலுத்தும் மையமாக தமிழக அரசு அங்கீகரித்துள்ளது. இ–சேவை இணையம் மூலமாக இதுவரை 28,568 மின் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

IV– பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடியசுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

★ ரூ.1.97 இலட்சம் செலவில் 550 பயனாளிகள் சமுதாயப் பரிமாற்றப் பயணம் அழைத்து செல்லல்.

★ 21,216 நபர்கள் பல்வேறு காப்பீடு திட்டங்களில் இணைந்துள்ளனர்.

★ 1,317 பயனாளிகளுக்கு துயர் குறைப்பு நிதியாக ரூ.84.92 இலட்சம் மென் கடன் வழங்கல்.

★ 306 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1,061 இலட்சம் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.

★ நுண்தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு 56 கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் கருத்துரு அனுமதிக்கப்பட்டு ரூ.117.68 இலட்சம் கடனுதவி விடுவிப்பு.

★ 3 மீன் விற்பனை சங்கங்கள் அமைக்கப்பட்டு, 163 மீனவர்கள் ரூ.50.10 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

★ 7 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டிடங்கள்.

★ ரூ.25.70 இலட்சம் செலவில் 3 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகக் கட்டடங்கள்.

★ ரூ.20.58 இலட்சம் செலவில் திருவள்ளூர் மாவட்ட மீனவ சங்க கூட்டமைப்பு அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

★ 202 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிர்களை இணைத்து 41 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.30.30 இலட்சம் வழங்கல்.

• • •

ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகள்

"நகரங்களைச் சுற்றிலும், தொழிலகங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவற்றைப் பரவலாக்க வேண்டுமெனில் ஊரகப்பகுதிகளில் அதற்கான உள் கட்டமைப்பு வசதி இருப்பது தேவையானதாகும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

பள்ளிக்கல்வித்துறை

- ★ பள்ளிக் கல்வித் துறைக்கென 2016–2017ஆம் ஆண்டிற்கு ரூ.24,130 கோடி நிதி ஒதுக்கீடு.

- ★ 2011–2012ஆம் ஆண்டிலிருந்து 2016–2017ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுடன் சேர்ந்து மொத்தம் ரூ.1,10,323 கோடி தொகை ஒதுக்கீடு.

- ★ 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு கணினி சார் கற்றல் அனுபவங்களை அளிக்கும் வகையிலும், செயல்முறையுடன் கல்வி கற்கும் வகையிலும் 80 இலட்சம் ரூபாய் செலவில் Digital Content பாடங்களை உருவாக்கி, கைப்பேசி மற்றும் கணினி போன்றவற்றில் பட உட்கிரகிப்பு செயலி Image Recognition Application Technology வாயிலாக மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கற்பிக்கும் திட்டம் அறிமுகம்.

- ★ ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் பயிற்சி வழங்கி அதன் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்திட ரூ.2.54 கோடி செலவில் 58 இடங்களில் கல்வி செயற்கைகோள் வசதி அறிமுகம்.

- ★ ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடப் புத்தகத்தில் உள்ள அனைத்து பாடல்களையும் பள்ளி மாணவ, மாணவியர் எளிதில் கற்கும் வகையில் தமிழக அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களின்

பங்கேற்புடன் ரூ.5 இலட்சம் செலவில் ஒளி ஒலி பாடல்களாக தயாரிக்கப்பட்ட குறுந்தகடு வெளியீடு.

★ ரூ.28.52 கோடி செலவில் 5 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கவும், 3 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தவும், 19 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தவும் மற்றும் இப்பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்புகள் மேற்கொள்ள நடவடிக்கை.

★ நடப்புக் கல்வி ஆண்டில் 60.79 கோடி செலவில் பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்திட நடவடிக்கை.

★ பெரும்பாக்கம் பகுதிக்கு குடிபெயர்ந்த 564 பள்ளி குழந்தைகள் மற்றும் எழில் நகர் பகுதிக்கு குடிபெயர்ந்த 1,127 பள்ளி குழந்தைகள் இடைநிற்றல் இல்லாமல் கல்வியை தொடர முறையே ஒரு தொடக்கப் பள்ளியும், ஒரு நடுநிலைப் பள்ளியும் தொடங்க நடவடிக்கை.

★ 10 மாவட்டங்களிலுள்ள 7,000 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு ரூ.5 கோடி செலவில் புதிதாக தயார் செய்யப்பட்ட எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் அட்டைகள் (SABL cards) வழங்கிட நடவடிக்கை

★ மலைப் பிரதேசங்களில் வாழும் மாணவர்கள் மழை மற்றும் குளிர் காலத்தில் உடல் நலம் பாதிப்பு இன்றி பள்ளிக்கு சென்று வர வேண்டும் என்னும் குறிக்கோளுடன் ரூ.8 கோடி செலவில் மழைக்கோட்டு (Rain coat), பூட்ஸ் (Boots),

மற்றும் காலுறைகள் (socks) வழங்கிட நடவடிக்கை.

- ★ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3, 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சமூக அறிவியல் பாடத்திற்கான வரைபட பயிற்சித்தாள்; மாணவர்களின் கணித அறிவினை மேம்படுத்தும் விதமாக, 1 மற்றும் 2ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 38,030 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும், மேலும், 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 8,603 அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணித உபகரணப் பெட்டிகள் (Math kit) ;

- ★ மாணாக்கர்களின் அறிவியல் அறிவினை ஊக்குவிப்பதற்காக 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 24,103 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும், மேலும் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 2,900 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் அறிவியல் உபகரணப் பெட்டிகள்;

- ★ ரூ.46.42 கோடி செலவில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3, 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தங்களது வாசித்தல் மற்றும் பொது அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் வாசிப்புத் திறன் மேம்பாட்டுக்கான புத்தகங்கள் வழங்கிட நடவடிக்கை.

- ★ அரசுப் பள்ளிகளில் பயிலும் 6, 7 மற்றும் 8ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் விதமாக 555 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 3 கணினிகள் கொண்ட கணினிவழிக் கற்றல் மையங்கள் உருவாக்க நடவடிக்கை.

- ★ 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.22 இலட்சம் செலவில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு பின்னணி குரலுடன் கூடிய அசைவூட்டும் காணொலி தொகுப்புகள் வழங்கிட நடவடிக்கை.

- ★ ரூ.45.57 கோடி செலவில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை, தாமத வருகை உடனுக்குடன் அறியும் விதமாக புதிய தொழில்நுட்ப உத்தியின் அடிப்படையில் தொட்டுணர் (Bio-Metric) கருவிகளைக் கொண்டு வருகைப் பதிவு முறையை முதன்முறையாக அறிமுகப்படுத்த நடவடிக்கை.

- ★ ரூ.11 கோடி செலவில் சமூக விழிப்புணர்வினை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் போட்டிகள் மற்றும் மாணவர்கள் புதிய முறையில் கல்வி கற்பதற்கு ஏதுவாக வகுப்பறையில் உள்ள சுவர்களில் பாடம் தொடர்புடைய வண்ணச் சுவர் சித்திரங்கள் வரைய நடவடிக்கை.

- ★ ரூ.33.22 கோடி செலவில் 770 அரசுப் பள்ளிகளிலும் 11 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களிலும் மெய்நிகர் வகுப்பறைகளை ஏற்படுத்த நடவடிக்கை. மேலும், 11 மைய ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களிலிருந்து நடத்தப்படும்.

- ★ நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஊக்கப்படுத்தும் விதமாக 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க நடவடிக்கை.

- ★ போக்குவரத்து மற்றும் வழிக்காவலர் ஏற்பாடுகள் நடப்புக் கல்வியாண்டிலும் ரூ.12.58 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

- பள்ளி செல்லாக் குழந்தைகள் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அளித்தல் நடப்புக் கல்வியாண்டிலும் ரூ.21 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

- மாற்றுத்திறன் கொண்ட 1,32,353 குழந்தைகளுக்கு உள்ளடக்கிய கல்வி மற்றும் உதவி உபகரணங்கள் ரூ.32.18 கோடி செலவில் வழங்க நடவடிக்கை.

- விலையில்லா கல்வி உபகரணங்களின் வரவு மற்றும் விநியோக நிலையினை கண்காணிக்க, ஆய்வு அதிகாரிகளுக்கு ரூ.4 கோடி செலவில் கணினி வழங்கிட நடவடிக்கை.

- மாணவர்கள் தங்களது பாடங்களை பொருள் உணர்ந்து விளக்கங்களுடன் பயின்றிடும் வகையில் ரூ. 9 இலட்சம் செலவில் பத்தாம் வகுப்புப் பாடநூல்களை மின்னியப் பதிப்புப் (E-Publication) பாடநூலாக மாற்ற நடவடிக்கை.

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்பட்ட உயர் கல்வி நூல்கள் ரூ.5 கோடி செலவில் மின்மியமாக்கிடவும் மற்றும் மறுபதிப்பு செய்திடவும் நடவடிக்கை.

- கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் செயல்படும் 44 மாதிரி பள்ளிகளுக்கு கணினி மற்றும் பிற பொருட்கள் ரூ.4 கோடி செலவில் வழங்கிட நடவடிக்கை.

- ரூ.5 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் விடுப்பு எடுக்காத மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்க நடவடிக்கை.

- ரூ.2.32 கோடி செலவில் பகுதி நேர நூலகங்களை ஊர்புற நூலகங்களாக தரம் உயர்த்துதல்

மற்றும் 93 ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் தோற்றுவித்திட நடவடிக்கை.

★ ரூ.64 இலட்சம் செலவில் 32 மாவட்ட மைய நூலகங்களில் சூரிய ஒளி மின்சாரம் அமைக்க நடவடிக்கை.

★ சென்னை மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தில் ஆங்கில வழியில் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பினை அறிமுகப்படுத்த நடவடிக்கை.

★ ரூ.1.96 கோடி செலவில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை சீரமைப்பு செய்திட நடவடிக்கை.

★ 29 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் மற்றும் எட்டு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை ரூ.3.70 கோடி செலவில் புனரமைக்க நடவடிக்கை.

★ ரூ.3.48 கோடி செலவில் சமநிலைக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்த நடவடிக்கை.

★ ரூ.9 இலட்சம் செலவில் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு 6 முதல் 12ஆம் வகுப்புவரை உள்ள ஆங்கிலவழி மற்றும் தமிழ்வழி பாடநூல்கள் முறையே இரண்டு தொகுப்புகள் வழங்கிட நடவடிக்கை.

★ ரூ. 4.20 இலட்சம் செலவில் ஆசிரியர் தகுதித் தேர்விற்கான இலவச சிறப்புப் பயிற்சி மையத்தை ஏற்படுத்த நடவடிக்கை.

★ ரூ.20 இலட்சம் செலவில் பள்ளிகளில் பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு வாரம் கடைபிடித்திட நடவடிக்கை.

★ அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் பொதுத் தேர்வு பணிகளை மேற்கொள்ள தனிப்பிரிவு அமைத்திட நடவடிக்கை.

★ ரூ.12 இலட்சம் செலவில் பெரம்பலூர் மற்றும் கோயம்பத்தூர் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களுக்கு இரண்டு ஈப்புகள் (ஊர்திகள்) வாங்கிட நடவடிக்கை.

★ ரூ.46 இலட்சம் செலவில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் வினாத்தாள்கள், விடைத்தாள்களை எளிதில் தூக்கி செல்ல மின் தூக்கி வசதியினை ஏற்படுத்திட நடவடிக்கை.

★ ரூ.3,086 கோடி செலவில் நான்கு இணைச் சீருடைகள், மலைவாழ் பகுதிகளில் உள்ள மதிய உணவு உட்கொள்ளும் மாணவர்களுக்கு கம்பளிச் சட்டை, மடிக்கணினி, இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப் பைகள், கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், நில வரைபடப் புத்தகங்கள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, சத்துணவுத் திட்டம், வருவாய் ஈட்டும் தாய் / தந்தை இழந்த மாணவர்களுக்கான நிதியுதவி போன்ற திட்டங்கள் செயல்படுத்துதல்.

• • •

நமது கடமை

“குழந்தைப் பருவம், குதூகலமாய், வண்ணத்துப் பூச்சிகளாய் விளையாடித் துள்ளித் திரியும் காலம். பள்ளி சென்று பயில வேண்டிய காலம். குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து, மேம்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

★ அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்க நாணயமானது 23.05.2016 முதல் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

★ இதனடிப்படையில், 2016–2017 ஆம் நிதியாண்டில் 1,52,500 பயனாளிகள் பயனடைய உள்ளனர்.

★ இத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும், 26 அரசு குழந்தைகள் காப்பகங்களில் தங்கியுள்ள 3,032 குழந்தைகளைக் கண்காணிக்கவும் அவர்களது பாதுகாப்பினைத் தொடர்ந்து உறுதி செய்யவும், கண்காணிப்பு கேமிரா கருவிகள் ரூ.40.82/– இலட்சம் செலவில் பொருத்துவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெண்கள் ஆண்களோடு சரி நிகர் சமமாக உயர...

“ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

★ சமுதாயத்தில் நலிவுற்ற ஆதரவற்றவர்களுக்கு சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் 21.05.2016 முதல் 22.08.2016 வரை 47,830 மனுதாரர்களுக்கு புதிதாக மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் சென்னையில் மட்டும் 2,918 ஆதரவற்றவர்களுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

• • •

தமிழ் வளர்ச்சி(ம)செய்தித் துறை

தமிழ் வளர்ச்சித் துறை

பயிலரங்கங்கள், கருத்தரங்கங்கள்

★ வேலூர், நாகப்பட்டினம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆட்சிமொழிப் பயிலரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

நல்கை

★ மதுரை, உலகத் தமிழ்ச்சங்கத்திற்கு இவ்வாண்டு நல்கையாக இதுவரை ரூ.36.34 இலட்சம் வழங்கல்.

★ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு இவ்வாண்டு நல்கையாக இதுவரை ரூ.1.04 கோடி வழங்கல்.

★ தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு இவ்வாண்டு நல்கையாக இதுவரை ரூ.2.44 கோடி வழங்கல்.

★ ஆந்திர மாநிலம் குப்பம் திராவிடப் பல்கலைக் கழகத்தில் முதுகலை தமிழ், ஆய்வுப்பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூ.1.60 இலட்சம் வழங்கல்.

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை

★ ரூ.25 கோடி மதிப்பில் மதுரை தல்லாகுளம் பகுதியில் உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டுள்ளது. உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தின் முதல் நிகழ்வாக 02.06.2016 அன்று 32 மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்ட சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

★ சீனக் கவிஞர் யூசி – திருக்குறள் அறக்கட்டளையின் இரண்டாவது அறக்கட்டளைச் சொற்பொழிவு 11.08.2016 அன்று நடத்தப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

★ திருக்குறள் – கொரிய மொழிபெயர்ப்பு நூலாக்கம் செய்யப்பட்டது.

★ 15 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★ தொல்காப்பிய ஆய்விருக்கை வழி "தொல்காப்பியத் தாவரங்கள்" தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

★ பல்கலைக்கழக நல்கைக் குழுவால் நடத்தப்பெறும் இளநிலை ஆராய்ச்சியாளர் / விரிவுரையாளர்களுக்கான போட்டித் தேர்வுக்கு கட்டணமின்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ "திருமந்திரமும் யோக வாழ்வியல் கலையும்" தலைப்பில் இரு நாட்கள் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

★ தமிழிலக்கியச் சொல்லடைவு – திட்டப்பணி நிறைவு செய்யப்பட்டு நூலாக்கத்திற்கு அணியமாக்கப்பட்டது. ●

தனித்தன்மை மிக்க மொழி

"ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித் தன்மை இருப்பது உண்டு. ஆனால், நம் தமிழுக்கு இருக்கும் தனித் தன்மை வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது. தான் சிதையாமல் மற்ற மொழிகளை வளர்க்கும் தனித் தன்மையும், ஆற்றலும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

★ சென்னை, அரசு மைய அச்சகத்தின் செயலாக்கப்படும் அச்சுப்பணிகளை உயர் தொழில்நுட்பம் கொண்டு புத்தகமாக வடிவமைத்திட புத்தகம் கட்டும் இயந்திரம் ஒன்று ரூ.60 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

★ அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளியில் புதிய தொழில்நுட்பம் கொண்ட டிஜிட்டல் எண்கள் இடும் இயந்திரம் ஒன்று ரூ.21 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

★ சென்னை, அரசு மைய அச்சகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் உள் தொடர்புபேசி (Intercom) வசதி ரூ.5 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

★ அரசு மைய அச்சகத்தில் அச்சிட உபயோகிக்கப்படும் அச்சுத் தகடுகளை தயாரிக்க தேவைப்படும் மென்தாளில் தரமான பிரதிகள் எடுக்க சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு பன்முக அச்சுப் பொறி ஒன்று ரூ.3.60 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

★ அச்சிடப்பட்ட படிவங்களை பதிவேடுகளாகவும் சிறு புத்தகங்களாகவும் கட்டுமானம் செய்திட மதுரை, சேலம், விருத்தாச்சலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய அரசு கிளை அச்சகங்களுக்கு ஐந்து கம்பியடிக்கும் இயந்திரங்கள் ரூ.8.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

★ அரசு எழுதுபொருள் கிடங்கில் காகித உருளைகளை சுமை ஊர்தியிலிருந்து

இறக்கவும், பணியிடத்திற்கு கொண்டு செல்லவும் பளுதூக்கும் இயந்திரம் ஒன்று ரூ.8.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

★ பளுதூக்கும் இயந்திரத்தினை இயக்க ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் எரிபொருள் தொடர் செலவினம் ரூ.68,400/– மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

★ எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, மதுரை, விருத்தாசலம், சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள கட்டடங்களில் மின்கசிவினால் ஏற்படக்கூடிய தீ விபத்தினை தடுத்திடும் வகையில் ரூ.48 இலட்சம் செலவில் மின் வசதிகள் புதுப்பித்து மேம்படுத்தப்படும்.

★ இவ்வரசு பதவியேற்ற 100 நாட்களுக்குள் 7 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

• • •

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

★ 2015ஆம் ஆண்டு உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் நாட்டிலேயே முதலாவது இடத்தை தொடர்ந்து இரண்டாவது முறையாக தமிழ்நாடு சுற்றுலா பெற்றுள்ளது என்று மைய அரசு சுற்றுலா அமைச்சகம் அறிவித்துள்ளது. இது ஒரு சரித்திர சாதனையாகும்.

★ கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் சவகர் சிறுவர் மன்றம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சவகர் சிறுவர் மன்ற சிறார்களுக்கும் ரூ.2 இலட்சம் செலவில் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

★ திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் குற்றால சாரல் விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் ரூ.2 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

★ காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் சங்குத் தீர்த்த புஷ்கரமேளா விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் ரூ.5 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

★ காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருவிடந்தையில் உள்ள நித்திய கல்யாண பெருமாள் கோயிலில் 30 கல்வெட்டுகள், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆக்கூர் கிராமத்திலுள்ள 2 கல்வெட்டுகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருப்பூந்துருத்தி கிராமத்திலுள்ள 1 கல்வெட்டு புதியதாக படியெடுக்கப்பட்டுள்ளன.

★ 28.06.2016 மற்றும் 27.07.2016 ஆகிய நாட்களில் இரு மாதாந்திர சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

★ திருவள்ளூர் மாவட்டம், பட்டரைப்பெரும்புதூர் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற அரிய தொல்பொருட்களைக் கொண்டு சிறப்புக் கண்காட்சி ஒன்று 04.07.2016 அன்று பட்டரைப்பெரும்புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்டது.

★ சென்னை அரசு அருங்காட்சியக படிமக் கூடம் மற்றும் வளர்கலைக் கூட காட்சியமைப்புகளில் புத்தாக்கம் செய்யப்பட்டு புதிய விளக்கொளி வசதியுடன் மேம்படுத்தப்பட்டன. மேலும், சேகரிப்பில் இருந்த 72 தனித்துவம் மிக்க வைணவப் படிமங்கள் வைணவ கூடத்திலும், 27 ஓவியங்கள் மற்றும் உலோகக் கலைப் பொருட்கள் வளர்கலைக் கூடத்திலும் காட்சியமைப்பு செய்யப்பட்டுள்ளன.

★ காட்சிக் கூடங்களில் காட்சியமைப்புப் பரப்பினை அதிகப்படுத்த பயன்பாடற்ற பொருட்கள், காட்சிப் பெட்டிகள் போன்றவை அகற்றப்பட்டு ஏலம் விடப்பட்டன.

★ உரிய பயிற்சிக்குப் பின்னர் கையடக்க நுழைவுச் சீட்டு விற்பனைக் கருவிகள் அனைத்து மாவட்ட அருங்காட்சியகங்களுக்கும் வழங்கப்பட்டன.

★ சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரும்பொருட்கள் அதன் முக்கியத்துவத்தினைப் பார்வையாளர்களுக்கு வழங்கிடும் வகையில் ‘திங்கள் காட்சிப்பொருள்’ என்ற தலைப்பில் மாதந்தோறும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

★ மே 2016இல் வேலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகங்களில் ‘பன்னாட்டு அருங்காட்சியக தினம்’ கொண்டாடப்பட்டது.

★ ‘வரலாற்றுக்கு முற்பட்ட புதுக்கோட்டை’ என்ற தலைப்பில் ஜூன் 2016இல் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் ஒரு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

★ ஜூலை 2016இல் கல்லூரி மாணவர்களுக்கு விலங்கியல் பொருட்களை பாதுகாத்தல் என்ற தலைப்பில் பயிற்சி மற்றும் சொற்பொழிவு சிவகங்கை அரசு அருங்காட்சியகத்தில் வழங்கப்பட்டன.

★ ஜூலை 2016இல் உலக பாம்புகள் தினத்தினையொட்டி சிறப்புக் கண்காட்சி மற்றும் சொற்பொழிவு கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி அருங்காட்சியகங்களில் நடைபெற்றன.

★ வேலூர் சிப்பாய் புரட்சி தினம் ஜூலை 2016இல் வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் கொண்டாடப்பட்டது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் “அன்னதானம்” என்ற உன்னதத் திட்டம், தற்போது மொத்தம் 724 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. மேலும், 30 திருக்கோயில்களில் விரிவுப்படுத்த நடவடிக்கையில் உள்ளது.

★ 296 திருக்கோயில்களில் 23.05.2016 முதல் 18.08.2016 வரை திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

★ இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த 67.29 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், 1,500 சதுரஅடி பரப்பளவுள்ள மனைகளும், 1.0006 கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்களும் சுவாதீனம் பெறப்பட்டு திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவைகளின் மதிப்பு சுமார் ரூ.26.65 கோடி ஆகும்.

★ 2015–2016ஆம் ஆண்டில் மானசரோவர் புனித பயணம் மேற்கொண்ட 51 நபர்களுக்கும், முக்திநாத் புனித பயணம் மேற்கொண்ட 72 நபர்களுக்கும் ரூ.27.60 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

★ தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 17 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.9.44 கோடி மதிப்பீட்டிலான 27 கட்டடங்கள் 18.07.2016 அன்று திறந்து வைக்கப்பட்டன.

• • •

போக்குவரத்துத் துறை

★ மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18.07.2016 அன்று 2016–2017ஆம் கல்வி ஆண்டிற்கு, 31.12 இலட்சம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு கட்டணமில்லா கையடக்க பேருந்து பயண அட்டைகள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

• • •

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

★ மாற்றுத்திறனாளி நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை முன்னோடித் திட்டங்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது. மேலும், அவர்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், கடனுதவிகள் மற்றும் மானியங்கள் வழங்கி அவர்களின் வாழ்வினை மேம்படுத்தி வருகிறது.

★ ஊனத்தின் குறைகளை ஆரம்ப நிலையில் தடுக்கும் நடவடிக்கையாக குறிப்பாக பார்வையற்றோருக்காக, சுமார் 114 குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் ரூ.21.98 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 487 செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகள் பயன்பெறும் வகையில் ரூ.81.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட, 79 குழந்தைகள் பயன்பெறும் வகையில், திருச்சியில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு ரூ.7.02 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாட்டிற்காக வங்கிக் கடனுதவி மூலம் நிதியுதவி பெறும் வகையில் 5 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.5 இலட்சம் செலவில் மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், சுமார் 1,800 நபர்கள் பயனளிக்கும் வகையில் ரூ.72 இலட்சம் நிதியுதவி ஒப்பளிக்கப்பட்டு, தையல் இயந்திரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

• • •

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

★ தென் கொரியா, இன்சியானில் 18 செப்டம்பர் முதல் 4 அக்டோபர் 2014 வரை நடைபெற்ற 17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களின் பயிற்றுநர்களுக்கு ரூ.72 இலட்சம் ஊக்கத்தொகையாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2012இல் சதுரங்கத்தில் இன்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. எம். ஆர். வெங்கடேஷ் அவர்களுக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2015இல் சதுரங்கத்தில் இன்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. ஆர். அரவிந்த் சிதம்பரம் அவர்களுக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2015இல் சதுரங்கத்தில் இன்டர்நேஷனல் மாஸ்டர் (பெண்கள்) பட்டம் வென்ற செல்வி எம். மஹாலட்சுமி அவர்களுக்கு ரூ.3 இலட்சம் ஊக்கத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2015இல் சதுரங்கத்தில் இன்டர்நேஷனல் மாஸ்டர் (பெண்கள்) பட்டம் வென்ற செல்வி மிஷெல் கேத்தரினா அவர்களுக்கு ரூ.3 இலட்சம் ஊக்கத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2011இல் சதுரங்கத்தில் இன்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. எஸ். பி. சேதுராமன் அவர்களுக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2013இல் சதுரங்கத்தில் இன்டர்நேஷனல் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. வி. ஏ. வி. ராஜேஷ் அவர்களுக்கு ரூ.3 இலட்சம் ஊக்கத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ துருக்கியில் நடைபெற்ற உலக பள்ளிகள் தடகள வாகையர் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கள் சி. அஜீத்குமார் மற்றும் ஆர். நவீன், பள்ளி மாணவியர்கள் எல். சமயஸ்ரீ மற்றும் எஸ். பிரியதர்ஷினி ஆகியோருக்கு ரூ.1.20 கோடி சிறப்பு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

★ உலக மாற்றுத்திறனாளர்களுக்கான சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் 4ஆவது முறையாக முதலிடம் பெற்ற திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த செல்வி கே. ஜெனிதா ஆண்டோ அவர்களுக்கு ரூ.25 இலட்சம் சிறப்பு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

★ 2016ஆம் ஆண்டு முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கான ரொக்கப் பரிசு ரூ.50,000/–, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவை கீழ்க்கண்ட 5 நபர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.08.2016 அன்று வழங்கப்பட்டது.

➢ திரு. ப. ரூபன் சந்தோஷ்,
சென்னை மாவட்டம்

➢ திரு. மு. சி. சரவண குமார்,
மதுரை மாவட்டம்

➢ திரு. கா. முகமது ரபீக்,
திண்டுக்கல் மாவட்டம்

➢ செல்வி கே. மாஷா நஸீம்,
கன்னியாகுமரி மாவட்டம்

➢ செல்வி எம். அபர்ணா, மதுரை மாவட்டம்

★ தில்லியில் நடைபெறும் குடியரசு தின விழா முகாமில் பங்கேற்கும் தேசிய மாணவர் படை மாணவியர்களுக்கு சின்னம்மை தடுப்பூசி போடுவதற்கான செலவினத் தொகையை 2016–2017ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ.1.74 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

• • •

நிலையான ஆட்சி - நிரந்தர வளர்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
செல்வி ஜெ ஜெயலலிதா
அவர்களின்
ஆற்றல் மிக்க தலைமையில்

100 நாள் சாதனைகள்

> **"தமிழகமே எனது குடும்பம்**
> **தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்**
> **தமிழக மக்களின் நலனே என் நலன்"**
>
> - செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

- சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய பயிர்க்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன் முற்றிலும் தள்ளுபடி. 16,94,145 விவசாயிகள் பயன்.
- அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1.91 கோடி மின் நுகர்வோர்கள் பயன். ஆண்டொன்றுக்கு 1,607 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு கூடுதல் மானியம்.
- கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரம் 200 யூனிட்டுகளாக உயர்வு. 78,378 கைத்தறி மின் நுகர்வோர்கள் பயன்.
- விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரம் 750 யூனிட்டுகளாக உயர்வு. 98,712 விசைத்தறி மின் நுகர்வோர்கள் பயன்.
- தாலிக்குத் தங்கம் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு.
- டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் சில்லறை மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரம் குறைப்பு. 500 கடைகள் மூடப்பட்டுள்ளன.
- மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி சாதனை.
- தமிழ்நாட்டிற்கு 563 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் வகையில் 1000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணுமின் நிலைய முதல் அலகு நாட்டிற்கு அர்ப்பணிப்பு.
- மின் நுகர்வோர் புதிய தாழ்வழுத்த மின் இணைப்பிற்கான விண்ணப்பங்களை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் திட்டம்.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 4,405 கோடி ரூபாய் நிதி உதவி.
- டெல்டா மாவட்ட விவசாயிகள் நலனுக்காக 54.65 கோடி ரூபாய் மதிப்பில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம். 1,37,314 விவசாயிகள் பயன். 64.30 கோடி ரூபாய் மதிப்பில் சம்பா சாகுபடி சிறப்புத் திட்டம்.
- 27,415 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம். 63.36 கோடி ரூபாய் மானியம்.
- சென்னை மெட்ரோ இரயில் திட்ட வழித்தடம்–1 வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்/விம்கோநகர் வரை விரிவாக்கப் பணிகள் 3,770 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கம்.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 1,61,886 நபர்களுக்கு 239 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சை.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் 2,01,533 பெண்களுக்கு 180.98 கோடி ரூபாய் நிதி உதவி.
- அம்மா திட்ட முகாம் மூலம் 1,99,209 மனுக்களுக்கு உடனடித் தீர்வு.
- 31.12 லட்சம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள்.
- 17 அமைப்பு சாரா நல வாரியங்களில் 69,764 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு 99,703 பயனாளிகளுக்கு 40.45 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.
- விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் 12,000 ரூபாய் ஆகவும், குடும்ப ஓய்வூதியம் மற்றும் சிறப்பு ஓய்வூதியம் 6,000 ரூபாய் ஆகவும் உயர்வு.
- மீன்பிடித் தடைக்காலத்தில் 1,53,149 மீனவ குடும்பங்களுக்கு 30.63 கோடி ரூபாய் நிவாரண உதவி.
- 3.8.2016 அன்று அதிகபட்சமாக 31.77 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் நிறுவனம் சாதனை.
- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் 47,830 நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம்.
- இணைய வழி சேவைகளை குடிமக்கள் பெறுவதற்கு தமிழக காவல்துறையின் கைப்பேசி செயலி.
- மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க 890 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.
- விலையில்லா ஆடு மற்றும் கறவைப் பசுக்கள் வழங்க 182.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

செ.ம.தொ.இ./920/வரைகலை/2016

சென்னை பெருநகர
காவல் துறையினரின்
ரோந்து பணியினை
மேம்படுத்தும் வகையில்
மிதிவண்டிகள்.

சென்னை பெருநகர
காவல் துறையினரின்
ரோந்து பணியினை
மேம்படுத்தும் வகையில்
இரு சக்கர வாகனங்கள்.

சவுதி அரேபியாவில்
பணிபுரிந்து
பாதிக்கப்பட்ட
திருமதி தாட்சாயிணிக்கு
நிவாரண நிதி.